# தமிழ்ப் பொழில்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு.

துணர் உ௯ | திருவள்ளுவர் யாண்டு ௲௯௮௪ விசய—தை, மாசி 1954—சனவரி, பிப்ரவரி | மலர் ௰, ௰௧

## தமிழர் கடமை.

பொழிற் றொண்டர்.

உரிமை பெற்ற இந்திய நாட்டில் வாழும் மக்கள் தங்கள் தங்கள் மொழியினையும், பண்பாட்டினையும் பல வகையிலும் போற்றிக் காத்து வருகின்றனர். ஆனால் தமிழ் நாட்டின் நிலையினை நினைத்தால் எல்லாத்துறைகளிலும் பொது நலம் பேணித்தொண்டு செய்வோர் மிகவும் குறைந்து காணப்படுகின்றனர். தக்க தின்ன தகாத தின்ன என்று உய்த்தறியும் பண்புடை மக்கள் மிகவும் அருகிக்காணப்படுகின்றனர். இந்நிலையில் தமிழர் பொது நன்மைகள் யாவும் மாற்றவரால் சூறையாடப்பட்டுப் பொத்தல் இலைக்கலமாகத் தமிழர் உள்ளனர். மற்றவர் உதவியால் வாழவேண்டுமென்னும் நியதியில்லாத செல்வம் படைத்த பெருமக்களும், மற்றவர் தயவில் தங்கள் வாழ்நாளைக் கடத்தவேண்டுமென்னும் படித்த பெருமக்களும் நெஞ்சுரமும், நேர்மைத்திறமுமின்றி எடுப்பார் கைப்பிள்ளைகளாக வுள்ளனர். தமிழனுக்கென்றே அமைந்த சிறப்பான, தலையான, உயர்வான சிறந்த பண்பாடுகளை ஒழித்துவிடவேண்டு மென்று எண்ணுவார் பலமுனைகளில் தங்கள் வன்மையைக் காட்டுகின்றனர். இப்படிப்பட்ட சூழ் நிலையில் தமிழ் நலமும், தமிழர் நலமும் பேணுவார் யாவர்? தனி மனிதன் செய்யக்கூடிய வேலையல்ல இது எல்லோரும் இத்துறையில் கவலையோடு எண்ணிப்பார்த்தால் யாதும், தமிழ் மொழி நன்னிலையடையும். தமிழ் மொழி வளர்ச்சிக்காக,

தமிழ் இலக்கிய வளர்ச்சிக்காக தமிழில் விஞ்ஞானம் போன்ற கலை நூற்கள் ஆக்குவதற்காகத் தமிழ் நாட்டு அரசியலார் என்ன கவலை எடுத்துக்கொள்ளுகின்றனர். அரசாங்கம் இத் துறையிலிறங்கினாலன்றித் தனிப்பட்டார் எவ்வளவு செய்தாலும் சிறக்காது. தமிழ் நாட்டில தமிழன் இறைப்பொருளால் ஆட்சி நடத்தும் அரசியலார் தமிழைப்பற்றிச் சிந்திப்பதில்லை. சிந்திக்கத் தூண்டுவாரும் இல்லை. வேற்று நாட்டு மொழிகளை கற்றுக்கொள்ள அவர்கள் கொடுக்கும் ஆக்கத்தில் காற்பங்கு கூடத் தமிழ் மொழிக்களிப்பதில்லை. மொழி ஆக்கமடையவில்லை என்றால் அம்மொழி பேசும் மக்களும் ஆக்கமடையவில்லை என்பதேபொருள். ஆகவே மொழியின் ஆக்கமென்பது மொழிபேசும் மக்களின் ஆக்கமாக ஆகும். தமிழர் ஒன்று கூட முடியாதவாறு சாதியாலும், சமயத்தாலும், அரசியல் கட்சிகளாலும் பிரிக்கப்பட்டுள்ளார். தமிழ்மொழி ஒன்றுதான் தமிழர்களை ஒன்றுபடுத்தும நிலையில் உள்ளது. ஆகவே தமிழர் யாவரும் மொழிப்பற்றுக்கொண்டு தமிழ் நாட்டை முன்னுக்குக்கொண்டு வரமுயல்வாராக.

---

## வருந்துகிறோம்.

அரசியல் துறையில் ஈடுபட்ட பெருமக்கட்கும், பிறமக்கட்கும், தமிழ்ச் சுவையினைச் சொல்லாலும், எழுத்தாலும் ஊட்டிய தமிழ்ப்பேரறிஞர், திரு. T. K. சிதம்பரநாத முதலியார் அவர்கள் (16—2—54) செவ்வாய்க்கிழமை இறைவன திருவடி நீழலெய்தியமைக்கு வருந்துகின்றோம்.

நெடுங்காலமாக நீதிக்கட்சியின் ஆக்கத்திற்குத்தொண்டு செய்தவர்களுள் ஒருவரும், கூட்டுறவு இயக்கம் தஞ்சை மாவட்டத்தில் சிறக்க இயலுதற்கு உறுதுணையாக இருந்து வரும், பெரு நிலக்கிழாருமான நெடும்பலம் திரு மிகு, இரா. சாமியப்ப முதலியாரவர்கள் (19—2—54) வெள்ளிக்கிழமை பிற்பகல் தமது தஞ்சை இல்லத்தில் இறைவன் திருவடி எய்தியமைக்கு வருந்துகிறோம்.

---

(44-ஆம் பக்கத் தொடர்ச்சி)

### சாகை

கவியரசர் கரந்தையில் குடியேறியபொழுது நண்பரொருவர் "தங்கள் சாகை (ஜாகை, குடியிருப்பு) எங்கே" என்று கேட்டார். உடனே கவியரசர் அச்சொல் இருபொருள்படும் தன்மை உணர்ந்தவராய் மிக நயமாக "எனது சாகை கரந்தையில்தான்" என்று கூறினர். சாகை என்பது குடியிருக்குமிடத்தையும் சாதலையும் உணர்த்தும். இரண்டும் ஒருங்கே கரந்தையிலேயே நிகழ்வுற்றது என்பது குறிப்பிடத்தக்கது.

உலகியலில் இவ்வாறு நகைச்சுவைபட பேசுகின்ற கவியரசர் இலக்கண இலக்கியங்களிலும் மாணவர்களுக்கு விளங்காத சிக்கலான பகுதிகளையும் நகைச்சுவைபட விளக்குந்திறம் மிக வியக்தின்புறற்பாலது.

### பெயர்ச்சொல் உருபேற்றல்

காலமொடு தோன்றுதல் வினைச்சொற்கு இலக்கணமாமாறுபோல உருபேற்று வருதல் பெயர்ச்சொற்கு இலக்கணமாகும். "உருபு நிலைதிரியாது ஈறுபெயர்க்காகும்" (சொல் 69) என்பது தொல்காப்பிய நூற்பா. இவ்வாறு பெயர் உருபேற்று வரும்போது அதற்குத் துணையாகச் சிற்சில இடங்களில் சாரியை வருதலுமுண்டு. அவ்வாறு பெயர்ச்சொல் உருபேற்பதற்கு உதவியாக வந்த சாரியை சில இடங்களில் பெயரை யொட்டியே எக்காலமும் நிற்கும் இயல்பினையுடைய உருபை ஓட்டிவிட்டு அவ்விடத்தில் தான் நிலைபெறுதலுமுண்டு. இந் நிகழ்ச்சியை உலகியல் நிகழ்ச்சியோடு ஒட்டிக் காட்டும் போதுதான் ஒவ்வொருவரும் அப்படியே வியப்பில் ஆழ்ந்து விடுகிறார்கள். ஒரு கணவன் ஒரு மனைவி இருவரும் மணந்துகொண்டு வாழ்க்கை தொடங்குகிறார்கள். பெயர் உருபேற்றல் எவ்வாறு இலக்கணமோ அதுபோலவே ஒரு ஆடவன் ஒரு மனைவியோடு வாழவேண்டும் என்பது இலக்கணம். கணவனும் மனைவியும் இல்லறம் நடத்துவதற்கு

வசதியாக வீட்டு வேலைகளைக் கவனிக்க ஒரு வேலைக்காரியை ஏற்படுத்துகிறார்கள். அதுபோல பெயர் உருபேற்குங்கால் சாரியை உதவியாக வருகிறது. வேலைக்காரியாகவந்த பெண் சில சமயங்களில் மனையாளை ஒட்டிவிட்டு அந்த இடத்தில் தானே நிலைபெற்று விடுவதுமுண்டு. அதுபோல பெயர் உருபேற்பதற்கு உதவியாகவந்த சாரியை உருபை ஒட்டிவிட்டு அந்த இடத்தில் தான் நிலைபெறுவதுமுண்டு என்று கூறி அதற்கு எடுத்துக்காட்டாக "ஆயிருதிணையின் இசைக்கும்" (சொல் 1) என்ற நூற்பா அடியை எடுத்துக் காட்டுவார்கள். இதைக் கேட்ட மாணவர்கள் குலுங்கக் குலுங்கச் சிரிப்பார்கள். கவியரசரும் தனது தொந்திவயிறு குலுங்குமாறு சிரித்துக்கொண்டேதான் கூறுவார்.

இங்கு நாம் மற்றொரு உண்மையைக் கருத்திற்கொள்ள வேண்டும். கவியரசர் தாம் காட்டிய எடுத்துக் காட்டின் மூலமாகச் சேனவரையர் உரையொன்றனை நுட்பமாக மறுத்துரைப்பது வியப்பிற்குரியதாகும்.

தன்னை மணந்துகொண்ட கணவன் பிறிதொரு பெண்ணையும் வாழ்க்கைத் துணைவியாக்கிக் கொள்வதை எந்தப் பெண்ணும் விரும்பவேமாட்டாள். ஒரு ஆடவன் ஒரு பெண்ணோடுதான் வாழ்க்கை நடத்தவேண்டும் என்று கருதுவது எவ்வாறு முறையோ அதுபோல ஒரு பெயர் ஒரு உருபை ஏற்றுவருதலே முறை. அவ்வாடவன் முதல் மனைவியோடு இரண்டாவதொரு மனைவியை ஏற்றுக் கொள்வதை எவ்வாறு முதல் மனைவி விரும்புவதில்லையோ அதுபோல அப்பெயர் முதலில் ஏற்ற உருபோடு மேலும் ஒரு உருபை ஏற்றுவருதலை முதல் உருபு விரும்புவதில்லை. என்னை? 'சாத்தனது' என பெயர் ஒருஉருபை ஏற்றல் இலக்கணமேயன்றி 'சாத்தனதனை' என அவ்வுருபு பிறிதோருருபை ஏற்றற்கு இலக்கணம் கிடையாது. இக்கருத்தினையே கவியரசர் தமது எடுத்துக் காட்டின் மூலம் நுட்பமாக உலகியலோடு ஒட்டி வலியுறுத்துகின்றார். அஃதேல் "பிறிது பிறிது" (சொல் 104) என்ற

சூத்திரத்தால் ஒரு உருபு பிறிதோருருபை ஏற்று வருதற்குத் தொல்காப்பியனுர் இலக்கணம் கூறினுராலெனின் :— நன்று சொன்னுய் ; அச் சூத்திரத்திற்கு அது பொருளன்மை தொல்காப்பிய முதற் சூத்திர விருத்தியில் சிவஞான முனிவர் விளங்க உரைத்தார். சிவஞான முனிவர் உரைத்தவாறு என்னையெனின் :— கூறுதும். தொல்காப்பியனுர் வேற்றுமை மயங்கியலில் உருபு தொடர்ந்து அடுக்குதலும் ஒரு மயக்கம் ஆகலான், அதன்கண்படும் இலக்கணம் "உருபு தொடர்ந்தடுக்கிய" (சொல் 103) என்பதனுற் கூறினர். பின்னர் "இறுதியு மிடையும்" (சொல் 103) என்னும் சூத்திரத்தால் அங்ஙனம் உருபு தொடர்ந்து அடுக்கும் வழி,

"அரிக்கும் பிரமற்கும் அல்லாத தேவர்கட்கும்"

என்றாற்போல ‡ இறுதியும் இடையும் உருபு விரிந்தே நிற்றலை நீக்கார் வடநூலார் எனப் பிறர் மதங்கூறிப் "பிறிது பிறிது" என்னும் சூத்திரத்தால் தமிழ் நடையில் அவ்வாறு நியமம் இன்றி,

"அரிக்கும் பிரமற்கும் அல்லாத தேவர்கட்கும்
தெரிக்கும் படித்தன்றி நின்ற சிவம்"
"கிழவன் தன்னேடுங் கிழத்தி தன்னேடும்
நற்றாய் கூறல் முற்றத் தோன்றாது"

(தொல்—பொரு—செய் 192)

என இறுதியும் இடையும் உருபு ஏற்றலும்

"அருமந்த தேவர் அயன்திருமாற்கு அரியசிவம்"
"ஒண்டொடி மாதர் கிழவன் கிழத்தியொடு
கண்டோர் மொழிதல் கண்டது என்ப"

(தொல்—பொரு—செய் 193)

என இடையிற்றெக இறுதியில் உருபு வருதலும் நெறிபட வழங்கிய வழக்கைச் சார்ந்து வழுவாகா என ஓதி உருபு தொகுமாறு அதிகாரப் பட்டமையால் தொகா நிலைச் சொற்

‡ அரிக்கு பிரமற்கு என்பனவற்றில் இடையிலும் தேவர்க்கு என்பதில் ஈற்றிலும் உருபு விரிந்து நின்றது.

களின் உருபு தொகுங்கால் படுமுறைமை "ஐயுங் கண்ணும்" என்னும் சூத்திரத்தால் ஓதினர்.

இனி, இவ்வாறன்றி "இறுதியும் இடையும்" என்னும் சூத்திரத்திற்கு கடந்தானிலத்தை, நிலத்தைக் கடந்தான் என வேற்றுமைத் தொடர் இறுதிக் கண்ணும் அதன் இடை நிலத்தும் உருபு நிலவுதலை வரையார் என்றுரைப்பின்,

"கூறிய முறையின் உருபுநிலை திரியாது
ஈறுபெயர்க் காகு மியற்கைய வென்ப"
(தொல்—சொல் 69)

என்பதனுள் வேற்றுமைத் தொடரின் யாண்டுப் பெயர் நின்றது ஆண்டுப் பெயர் இறுதியின் உருபு நிற்கும் என்பது தானே பெறப்படுதலின் இச் சூத்திரம் வெற்றெனத் தொடுத்தலால் முடியும் என்க" என்றுரைத்தார். எனவே சேனுவரையர் கருத்தினை மறுத்தும் சிவஞான முனிவர் கருத்தினை உட்கொண்டும் கவியரசர் நுட்பமாகக் கூறும் ஆற்றல்மிக வியந்தின்புறற் பாலதாம்.

## ஒற்றுமை நயமும் வேற்றுமை நயமும்

இலக்கணம் கற்கும்போது இலக்கணக் குறியீடுகளின் பொருள்களை நன்குணர்ந்து படித்தால் இலக்கணக் கல்வி மிக எளிதாக அமையும். இக்குறியீடுகளையும் எளிய முறையில் விளக்குதலில் கவியரசர் மிக ஆற்றல் படைத்திருந்தார். தொல்காப்பிய உரைகளிலே உரையாசிரியர்கள் ஒற்றுமை நயம் வேற்றுமை நயம்என்பனவற்றை ஆங்காங்கே குறித்துச் செல்வர். "குற்றியலுகரம் முறைப்பெயர் மருங்கின்" (தொல் எழு 67) என்ற மொழி மரபு சூத்திரத்தில் முறைப் பெயரிடத்துக் குற்றியலுகரம் மொழிக்கு முதலாகும் என்று கூறுகிறார் தொல்காப்பியனார். அது "நுந்தை" என்பது. அச் சூத்திரத்தில் "ஈண்டுக் குற்றியலுகரம் மெய்ப்பின்னர் நின்றதேனும் ஒற்றுமை நயத்தான் மொழிக்கு முதலென்றார்" என்று நச்சினார்க்கினியர் எழுதுவர். 'நு' என்ற நகர உக

ரத்தில் ககர மெய் முதலில் நிற்கின்றது. உகரவுயிர் பின் நிற்கின்றது. பின்னிற்கும் உகர வுயிரையே மொழி முதற் குற்றியலுகரம் என்று கூறுகிறார் ஆசிரியர். இதனையே ஒற்றுமை நயம் என்று உரையாசிரியர்கள் கூறுவர்.

இனி, "உயிர்மெய் அல்லன மொழிமுதலாகா" என்ற நூற்பாவில் உயிர்மெய் அல்லாத தனி மெய்கள் மொழிக்கு முதலாகா என்று கூறுகிறார் தொல்காப்பியனார். இங்கு உயிர் மெய் வேறு மெய் வேறு என்று பிரிக்கப்படுகிறது. இந் நூற் பாவில் "ஈண்டு உயிர்மெய் என்றது வேற்றுமை நயங் கருதிற்று" என்று உரை எழுதுவர் நச்சினார்க்கினியர். உயிர் மெய் வேறு தனிமெய் வேறு என்று பிரித்துக் கூறுவதால் இது வேற்றுமை நயமாயிற்று. இக் கருத்துக்களை கவியரசர் உலகியலோடு ஒட்டி மிக எளிய முறையில் நயமுடன் விளக்கிக் காட்டுவார்.

ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் புதுக்கோட்டை மன்னர்கள் சில விழா நாட்களில் பார்ப்பனர்களுக்கு ஆடை முதலியன தானம் செய்வதுண்டு. அக் காலங்களில் கருவுற்றிருக்கும் பார்ப்பன மாதர்களும் புதுக்கோட்டை சென்று தானம் வாங்கி வருதலுமுண்டு ஒருசமயம் கருவுற்றிருந்த ஒரு பார்ப்பனி, தனது ஐந்து வயது குழந்தையையும் எடுத்துக்கொண்டு புதுக்கோட்டைக்குப் புறப்பட்டாள். புகைவண்டி நிலையத்தில் பிரயாண அனுமதிச் சீட்டு (டிக்கட்) ஒன்று வாங்கிக்கொண்டு புகை வண்டித் தொடரில் சென்று அமர்ந்தாள். புகைவண்டி புதுக் கோட்டையை நோக்கிப் புறப்பட்டது. வழியில் சீட்டுச் சோதனையாளர் (T. T. R.) வந்தார் பார்ப்பனி தன் குழந்தையை மடியில் தூக்கி வைத்துக்கொண்டாள். சோதனையாளர் பிரயாணச் சீட்டைக் கேட்டார் பார்ப்பனி தான் வைத்திருந்த ஒரு சீட்டைக் கொடுத்தாள் இன்னொன்று எங்கே என்றார், சோதனையாளர். பார்ப்பனி நான் மட்டுந்தானே; மடியிலிருப்பது சிறுகுழந்தையல்லவா என்று விடை பகர்ந்தாள். சோதனையாளர் பார்ப்பனியின் பரிதாப நிலையைக்கண்டு மனமிரங்கிச் சென்றுவிட்டார். ஒரு சீட்டில் இவ்வாறு இரண்டுபேர் செல்வதே "ஒற்றுமை நயம்" என்று நகை நயம்படக் கூறுவார்

கவியரசர். புதுக்கோட்டை புகைவண்டி நிலையம் வந்தவுடன் அப் பார்ப்பனி இறங்கி மன்னர் அரண்மனையை நோக்கிச் சென்றாள். அரண்மனையில் தனக்கென ஒரு தானம் வாங்கினாள். கீழே நின்ற தன் ஐந்துவயது குழந்தையைச் சுட்டிக்காட்டி மற்றொரு தானம் வாங்கினாள். இறுதியாகத் தான் ஒன்பது மாதக் கருவினள் என்பதையும் எடுத்துக்காட்டி மூன்றாவதொரு தானமும் வாங்கினாள். புகைவண்டியில் ஒரு பிரயாணச் சீட்டில் ஒன்றாகவந்த பார்ப்பனி அரண்மனையில் தானம் வாங்கும்போது மூவராகப் பிரிந்து வேறுபட்டு நின்றாள். இதுவே வேற்றுமை நயம் என்று கூறும்போது தூங்கிக்கொண்டே இருக்கும் இயல்புடைய பக்கத்து வகுப்பு மாணவர்கள்கூட துள்ளிக் குதித்து விழித்தெழும் அளவுக்குச் சிரிப்பொலி எழுந்து மாணவர்களிடம் புதுக்கிளர்ச்சியை உண்டாக்கிவிடும்.

## ஆகுபெயர்.

மொழிக் கல்விக்கு இலக்கணம் வேண்டுமா? பொது மக்கள் இலக்கணத்தை எளிய முறையில் தெரிந்துகொள்ள முடியுமா? இலக்கணக்கல்வி இல்லாவிட்டால் என்ன? என்று பலவாறு இலக்கணக் கல்வி வேண்டாம் என்னும் கருத்துப் பட பேசும் தமிழறிஞர்களும் தமிழ் நாட்டில் இருக்கிறார்கள். அவர்கள்,

"வழக்குஞ் செய்யுளும் ஆயிருமுதலின்
எழுத்துஞ் சொல்லும் பொருளும்நாடி"

என்ற பனம் பாரனார் கூற்றினையும்

"இலக்கண மென்பது இலக்கியம் முறையுற
வைத்ததென்று வழங்கப் படுமே"

"எள்ளினின் றெண்ணெ யெடுப்பது போல
இலக்கியத்தினின் றெடுபடு மிலக்கணம்"

என்ற நூற்பாக்களையும்

"இலக்கியம் கண்டதற் கிலக்கண மியம்பலின்"

என்ற பவணந்தியார் கூற்றினையும் அறியார்போலும்! அவர்களுக்குப் பதில் கூறும் முறையில் பொது மக்கள் கூட தங்களை யறியாமல் பல சமயங்களில் இலக்கணத்தைக் கையாளுகிறார்

கள். அவர்கள் உள்ளத்திலும் உரையிலும் இலக்கணக் கருத்துக்கள் நிலைபெற்றிருக்கின்றன என்று கவியரசர் எடுத்துக் கூறும்போது மாணவர்கள் உள்ளங்களிலே சிந்தனை ஊற்றுக்கள் பெருகிச் சிரிப்பென்னும் ஆரவாரத்தோடு காவிரியை ஒப்ப விரைந்த செலவினை யுடைத்தாகிச் செல்லத் தொடங்கும் என்று கூறினால் அது வியப்பன்று.

உங்கள் வீட்டில் என்ன சாப்பிடுகிறீர்கள் என்று கேட்டால் "புழுங்கல்" என்று சிலர் கூறுவார்கள். இன்னும் சிலர் "பச்சரிசி" என்று கூறுவார்கள். அவர்கள் பச்சரிசியையோ புழுங்கலையோ அப்படியே சாப்பிடமாட்டார்கள். பச்சரிசியாலாகிய உணவு அல்லது புழுங்கலரிசியாலாகிய உணவு இவற்றைத்தான் சாப்பிடுவார்கள். ஆயினும் என்ன சாப்பிடுகிறீர்கள் என்று கேட்டவுடனே பச்சரிசி, புழுங்கல் என்றே கூறுவார்கள். இதனையே இலக்கணத்தில் ஆகுபெயர் என்று கூறுகிறோம். ஒன்றன் பெயரை அதனோடு இயைபுபட்ட பிறிதொன்றற்கு இட்டு வழங்குவதே ஆகுபெயரிலக்கணமாகும். இங்கு அரிசியின் பெயர் அதனோடு இயைபுபட்ட (அரிசியாலாக்கப்பட்ட) சோற்றுக்கு ஆகிவந்தது. தொல்காப்பியனார் கருத்துப்படி இது "இயன்றது மொழிதல்" என்னும் ஆகுபெயராகும்.

காய்கறிச் சந்தைக்குச் சென்றவர்கள் முருங்கைக்காய், கத்தரிக்காய், வெண்டைக்காய் பச்சைக் கொத்துமல்லி முதலியன வாங்கிவிட்டு மேலும் என்ன வாங்கவேண்டுமென்று கணக்குப் பார்ப்பார்கள். அப்பொழுது முருங்கைக்காயைச் சுட்டி இது "குழம்பு" என்றும் கத்தரிக்காய் வெண்டைக்காய் இவற்றைச் சுட்டி இவை "பொரியல்" அல்லது "அவியல்" என்றும் கொத்தமல்லியைச் சுட்டி இது "துவையல்" என்றும் கூறிக் கணக்குப் பார்ப்பதுண்டு. இவ்வாறு காய்கறிகளை வைத்துக்கொண்டே குழம்பு, பொரியல் அவியல், துவையல் என்பனபோலக் கூறுவதும் மேற்கூறிய ஆகுபெயரேயாகும்.

இன்னும் வண்டிக்காளைகளைக் குறித்து செவலை, வெள்ளை என்று நிறத்தின் பெயரால் கூறுவதும், வலவன் இடவன் என்று இடத்தின் பெயரால் குறிப்பிடுவதும் ஆகுபெயரே யாகும். இவையெல்லாம் கல்வியறிவில்லா மக்களிடமும் இயல்பாகவே வழங்கி வருதலைக் கண்கூடாகக் காண்கிறோம்.

## பன்மை சுட்டிய பெயர்

தொல்காப்பியனார் இருதிணைப் பொதுப் பெயருள் விரிப் பெயர் பதினான்கிற்கும் பால் பாகுபாடு செய்யும்போது அவற்றை நான்கு வகையாகப் பிரிக்கின்றார். அவற்றுள் பன்மை சுட்டிய பெயரும் ஒன்று. இப்பன்மை சுட்டிய பெயர் உயர்திணை பலர்பால் ஒழிந்த ஏனைய நான்கு பாலிற்கும் வரும். எனவே பன்மை சுட்டிய பெயர் உயர்திணையில் ஒருமைக்கும் அஃறிணையில் ஒருமை பன்மை ஆகிய இரண்டிற்கும் பொதுவாக வரும் என்றாகிறது. இங்கு ஒரு ஐயம் நிகழ்கிறது; பன்மைக்கேயன்றி ஒருமைக்கு முரியவாய் வருவனவற்றை பன்மை சுட்டிய பெயர் என்று எவ்வாறு கூறலாம் என்பது. சேனாவரையர், பன்மைப் பெயர் ஒருமையுணர்த்து மாயினும் பிறவாற்றானுணர்த்தப்படாத பன்மையை ஒருகாலுணர்த்துதலின் அப் பன்மையான் அவை வரைந்து சுட்டப்படுதலின் அப் பெயரவாயின (பன்மைப் பெயரவாயின) என்று காரணங் கூறுகின்றார். கவியரசர் பன்மைப் பெயரென்பது "உமாமகேசுவரன்" என்றார்போல என்று கூறுவார். உமையை ஒருபாகத்திலே கொண்டிருக்கும் மகேசுவரனையே நாம் உமாமகேசுவரன் என்று குறிக்கிறோம். ஆனால் உமாமகேசுவரன் என்ற பெயரில் அடங்காத கங்கையையும் அவன் சடையில் வைத்திருக்கிறான். எனவே உமாமகேசுவரன் என்ற பெயர் உமையையும், மகேசுவரனையுமேயன்றி அப் பெயரில் குறிக்கப்படாத கங்கையையும் குறித்து வருகிறது. அதுபோலவே பன்மை சுட்டிய பெயரென்பது தன் பெயருக்குரிய பன்மையையேயன்றி அப்பெயரால் குறிக்கப்படாத ஒருமையையும் சுட்டி வருகிறது என்று கவியரசர் அதனை விளக்கி இயைபுபடுத்திக் காட்டுவார்.

இலக்கணத்தை இவ்வாறு எளிய எடுத்துக் காட்டுகள் மூலம் விளக்குகின்ற அரிய ஆற்றல் அவரிடம் இயல்பாகவே அமைந் திருந்தது.

## இலக்கியம்

"பெருக்கத்து வேண்டும் பணிதல் சிறிய
சுருக்கத்து வேண்டும் உயர்வு"

என்ற திருக்குறளுக்கு அவர் விளக்கம் கூறும்போது பவுண் டன் பேனாவின் இயல்பை எடுத்துக் காட்டுவார். பவுண்டன் பேனாவில் மை, நிறைந்திருக்கும்போது எழுதினால் குறைவாக வருவதும் மை, குறைந்திருக்கும்போது எழுதினால் மை அதிகமாகக் கொட்டுவதும் அதன் இயல்பு. அதுபோல நிறைந்த செல்வமுளதாயவழி யாவர் மாட்டும் பணிவும் செல்வம் சுருங்கியவழி பணியாமையும் வேண்டும் என்பது கருத்து.

"எண்ணறக் கற்று எழுத்தறப் பயின்றும்
பெண்ணறி வென்பது பெரும் பேதைமைத்து"

என்ற அடிகளுக்கு எண்ணினையும் எழுத்தினையும் முற்றப் பயின்றாலும் பெண்களறிவு அறியாமையை முதன்மையாகக் கொண்டது என்றே பொதுவாக யாவரும் உரை செய்வர். கவியரசர் எண்ணினையும் எழுத்தினையும் பழுதறப் பயின்றா லும் "பெண்ணறிவு" என்று பெண்களறிவினை இதழ்ந்து கூறும் கூற்றுப் பெரும் பேதைமையினை யுடைத்து என்று நய மாகக் கூறுவார்கள்.

போர் மேற்சென்று வந்த அதிகமானைக் கண்ட ஒளவையார்

"கையது வேலே காலன புனைகழல்
மெய்யது வியரே மிடற்றது பசும்புண்"

என்று தொடங்கிப் பாடிய பாடலொன்று புறநானூற்றி லுள்ளது. அப் பாடலை,

"கையது கர்சீப் காலன பூட்ஸே
மெய்யது செண்டே மிடற்றது டையே"

என்று தற்கால இளைஞர்களுக்கேற்ப மாற்றிப் பாடினால் மிகப் பொருத்தமாக இருக்கும் என்று அவர் கூறுவார். இன்னும் இதுபோல பல செய்யுட்களை அவர் இக்காலயத்திற் கேற்ப மாற்றியமைத்துக் கூறுவதைக் கேட்டால் மிக வேடிக்கையாக இருக்கும். எடுத்துக்காட்டாக ஒன்று மட்டுமே இங்கு கூறினேன்.

## கவியரசு பெயர்க் காரணம்

கரந்தைத் தமிழ்ச் சங்கத்தின் வெள்ளிவிழாவின்போது அவரது செய்யுளியற்றும் ஆற்றலைப் பாராட்டி சங்கத்தார் "கவியரசு" என்ற சிறப்புப் பெயரை வழங்கியமை யாவரும் அறிந்ததே. கவியரசர் தனக்கு இச் சிறப்புப்பெயர் கிடைத்தமைக்கு வேறு இரண்டு காரணங்களைக் கற்பனை செய்து கூறுவார்கள்.

எனது சொந்த ஊர் ஒரு சிற்றூர். அங்கு அரசமரங்கள் பல உண்டு. கவிந்த அரசமரம் ஒன்று இருந்தது. சிறு வயதில் நான் அக்கவிந்த அரசமரத்தில் நிழலிலமர்ந்து படிப்பது வழக்கம். இதை யாரோ பார்த்துச் சங்கத்தாரிடம் தெரிவித்து விட்டார்கள். உடனே சங்கத்தார் அதனையே எனக்குச் சிறப்புப் பெயராக்கிவிட்டார்கள் என்று கூறுவார். வேறொரு காரணமும் கூறுவார் அதனை அவர் மாணவர்கள் முதலானவர்களிடம் சென்று அறிந்து மகிழ்க.

கவியரசர் கூறும் நகைச்சுவைப் பகுதிகள் அனைத்தையும் தொகுத்து எழுதுவதானால் அதுவே ஒரு பெருநூலாகிவிடும். மேலும் அவர் கூறும் சில நயமுடைய பகுதிகள் எழுதிக் காட்டும் இயல்புடையவல்ல. சில பகுதிகளை எழுதிக் காட்டினால் அதன் சுவை குன்றிவிடும். எனவே அவற்றையெல்லாம் தெரிந்துகொள்ளும் விருப்பினர் அவர் மாணவர்களிடமோ அல்லது நண்பர்களிடமோ சென்று தெரிந்து மகிழ்சிறக்க.

தமிழ் வாழ்க.

# புலவர் உள்ளம்.

## (கவிதை நாடகம்.)

வித்துவான் ச. பாலசுந்தரம், விரிவுரையாளர்,
கரந்தைப் புலவர் கல்லூரி.

சங்க வாழ்த்து.

இராகம்—மோகனம். தாளம்—ஏகதாளம்.

எல்லோரும் :—

வாழிய செந்தமிழ்த் தாய்வளம் ஓங்கியே!
வாழிய சீர்கரந் தைத்தமிழ்ச் சங்கமே!
வாழிய முத்தமிழ் வான்புகழ் மேவியே!
வாழிய நற்கலை வையகம் வாழியே!

I

இடம் :- நதிக்கரை ஓரம். காலம்-வைகறை. தோன்றுவோர்-புலவர்.

[காலை நீராடிக் கதிர்வணக்கம் புரியும் புலவர் காலைக் காட்சிகளைப் பாடுகிறார்]

முதனிலை.

இராகம்—பூபாளம். தாளம்—ஆதி.

புலவர் :—

கதிரவன் தோன்றினன் காரிருள் மறைந்தது
கடற்புவி பொன்மய மாகி நிறைந்தது (கதி)

இடைநிலை.

துதிபெறுந் தாமரை தோன்றின பொய்கையுள்
தொடர்ந்தது புள்ளொலி துலங்கின யாவும் (கதி)

இறுதிநிலை.

நதிப்புன லாடவும் நங்கையர் பாடவும்
நன்செயுள் காளையர் ஏரொடும் நீடவும்
மதிநிறை பாவலர் மகிழ்ந்துரை யாடவும்
மரந்தளிர் பூக்கவும் மாமயில் ஆடவும் (கதி)

## II

இடம்: புலவர் வீடு, காலம்—காலை

தோன்றுவோர்:- கலைச்செல்வி—புலவர்.

[பொருளின்றி வறுமையால் வாடிக்கொண்டிருந்த கலைச்செல்வி நோயால் துன்பமுற்றுக் "கணவனைப் பேணுதற்கு முடியவில்லையே" என வருந்துகிருள்]

கலை:- அன்பான கணவருக்கின் றுணவளிக்க
ஆற்ருமல் என்னுடலை அலைக்கும் இந்த
துன்பான நோயாலே வாடு கின்றேன்
துணைவியென்ற பெயரெனக்குப் பொருத்தமாமோ?
இன்பான முகத்துடனே இலையில் அன்னம்
இன்றவர்க்கு யாரிடுவார்? என்னை வாட்டும்
வன்பான நோயேயுன் வலிமை எல்லாம்
வறுமையுற்ற என்னிடமா காட்டவேண்டும் 1

திருந்தாத வறுமையென்ற பேயே! உன்னால்
செல்வமெலாம் சிந்தனையோ டிழந்தோம் இன்னும்
விருந்திழந்தோம் வேதனையால் வாடினேம் யாம்
விரும்புபொருள் அடையாமல் வெறுக்கச் செய்தாய்
பொருந்துபொருள் யாவையுமே இழந்தோம் உன்னால்
பொன்னுடலும் என்புடலாய்ப் போயிற்றந்தோ!
அருந்துதற்கு நீருணவும் அகப்படாத
அவலநிலை எமக்களித்தாய் அந்தோ! பாவி! 2

கலையறிவும் கருதரிய புலமை நெஞ்சும்
கடலன்ன கற்பனையும் அழகும் சான்ற
தலைவரையான் பெற்றிருந்தும் தாங்க ஒண்ணு
இடும்பையினுல் தவிப்பதுவும் தகுமோ? ஈசா!

[புலவர் காலைக்கடன்களை முடித்துக்கொண்டு வீட்டிற்கு வந்து வெளியே நிற்கும்போது தனியே கூறுகின்ருர்]

புல:- விலையாகப் புலமைதனை விற்பதற்கு
வேந்தர்களை நாடுவதா? சீச்சீ இந்த
நிலையற்ற வாழ்வுக்கா நெறியின் நீங்கி
நெஞ்சுலற இரப்பதினும் சாதல் மேலாம். 3

கண்ணே! என் கலைச்செல்வி! எங்கே? காணோம்!

கலை :- கதவருகில் என்னஒலி? நாதா! வந்தேன்

புல :- பெண்ணேஉன் உடற்கென்ன? பிணியோ? அன்பே!
பிழைபுரிந்தார் போல்முகத்தில் வாட்டமென்ன?

எண்ணாத எண்ணமெல்லாம் இமைக்க ணத்துள்
என்னுளத்தை எரிக்கிறதே ஏன் இக்கண்ணீர்?
கண்ணேஎன் உயிரே? உன்கரும்பு மேனி
கனல்போலச் சுடுகிறதே அம்மா! கெட்டேன்! 4

இத்தனைநாள் என்னுடலைப் பேணி வந்த
எழிலேஉன் இயல்புணராப் பேதையேன்யான்
பித்தனைப்போல் இருந்துவிட்டேன் பெற்றமக்கள்
பசிப்பிணியால் வாடலையும் மறந்தேன் மேலாம்
சொத்தனைய உங்கள்துயர் காணாப் பாவி
தூயமலர் போன்றஉன துடல் உழைப்பால்
எத்தனைநாள் அறியாமல் வாழ்ந்து விட்டேன்!
என்னுடைய கல்வியினால் பயன் தான் என்னே? 5

மனைவியொடு மக்களையும் காப்பதற்கு
வகையறியா மனிதவிலங் கானேன் என்னை?
இனியேனும் மன்னிப்பாய் இன்றே செல்வேன்
ஏழ்மைதனைப் புறங்காண்பேன் இன்பப் பாவாய்!
உனையிந்த நிலையடையச் செய்தேன் பாவி
உண்மையினை உணர்ந்தேன் என்உடலு ழைப்பால்
மனைவாழ்வைச் செப்பமுறச் செய்வேன்......

கலை :- நாதா! 6

ஏனிந்த மனக்கலக்கம் கண்ணீரா! ஆ!
புன்மைசெயும் நோயால்என் கடன் மறந்தேன்

புல :- பொற்புடைய பாவாய்நீ வெற்றிபெற்றாய்!
என்மனத்தைத் திருத்தியஇந் நோய்க்கு நன்றி
இனிக்கடமை தவறேன்யான்,

கலை :- தலைவரே நீர்!
வன்மையிலா எனைப்பிரிய வேண்டாம் இந்த

வறுமையினை ஒருநொடியில் வெல்வேன் தங்கள்
தன்மையறிந் தொழுகுகின்ற அரசர்........

புலவர் :— உண்டு

தமிழ்த்தாயின் மகனென்பார் வெளிமான் தன்னை, 7
நாலைந்து நாட்களிலே வருவேன் பாவாய்!
நலிவின்றி வாழ்த்தி விடை கொடுப்பாய் நன்றே

கலை :— காலமுந்தவர வேண்டும் தலைவா! என்றன்
கருத்தங்கும் உடலிங்கு மாக நிற்பேன்.
(புலவர் பிரியாவிடைபெற்றுச் செல்லும்போது தன்னுள்ளே கூறுகிறார்)

(திருப்புக் காட்சி)

புலவர் :— சேலுந்து கண்ணாளைப் பிரிய வைத்த
செல்வத்தின் வலிமைதான் என்னே! ஆ! ஆ!
நூலேந்திக் கற்றபல நுணுக்க மெல்லாம்
நொய்ம்மை தரும் வறுமைக்குத் தோற்கும் போலும். 8

## III

இடம் :- சோலை வழி-காலம் :- முற்பகல்-தோன்றுவோர் :- புலவர்.
[புலவர் வழியிடங்களில் காணுங்காட்சிகளில் உள்ளத்தைப் போக்கித் துன்புற்றுக் கூறுகிறார்]

இராகம்—கானடா.

ஆடுகின்ற மயில்களின்பின் அன்பு பூக்க
அருகினிலே பேடைகள் தாம் மகிழ்வ தென்னே!
பாடுகின்ற கிள்ளைகளின் பரிவும், நல்ல
பழங்களைத் தன் அலகினிலே ஏந்திச்செல்லும்
நீடுசிறைப் பறவைகளின் களிப்பும் என்றன்
நெஞ்சினிலே மகிழ்ச்சியலை பொங்கச் செய்யும்.
ஓடுகின்ற தண்புனலில் உயர்ந்து துள்ளி
ஒளிருகின்ற கயல்மீனின் காட்சி என்னே! 9

இராகம்—பிலகரி.

சிந்தனையில் தேனூற்றைப் பெருகச் செய்யும்
சிறுமுயல்கள் துள்ளுவதும், மரங்கள்தோறும்
மந்திகளின் பிரிந்துவிளை யாடு கின்ற
மகிழ்வுநிறை குட்டிகளின் அழகும் ஓடி
வந்தெதிரே மருளுகின்ற மான்கள் கூட்டம்
மகிழ்ந்துவிளை யாடுதலும் கண்டால் இந்த
நிந்தனைசேர் பிறவியினும் நிரப்பும் துன்பும்
நெருங்கலிலா இவைதம்மின் வாழ்வு மேலாம். 10

## IV

இடம் :— இளவெளிமானின் அரண்மனையும்—வாயிலும்
காலம் :— நண்பகல் தோன்றுவோர் :—புலவர்—காவலர்கள்.
[வெளிமானூரையும் மாளிகையையும் கண்டு வியப்புடன் செல்லுகிறார்]

காவலன் 1:- எல்லோரும் விரும்புகின்ற வகையில் நாட்டை
இன்பமுடன் ஆட்சிசெய்த மன்னருக்குப்
பொல்லாத நோய்வந்த தாலே வீரர்
போரிழந்தார் புலவர்களும் போக்கிழந்தார்
கல்லாரும் நம்போலக் கவலை கொண்டார்.

காவலன் 2:- காலமெலாம் ஏழைகட்குத் துன்பந்தானே?

காவலன் 1:- நல்லாரைக் காண்பதற்கே முடியஉல்லை!

காவலன் 2:- நம் வயிற்றை அன்றிப்பிற கவலை ஏனோ?

புலவர் — சீராரும் மாளிகைசூழ் நகர மெல்லாம்
செங்கதிரோன் பொன்மழையைப் பாய்ச்சு கின்றான்
ஏரார்ந்த வெளிமானின் இன்பம் மிக்க
அரண்மனைமேல் அமைந்தகொடி அசைவதென்னை 11

வாரீர் நீர்! என்பதுபோல் வளியால் ஆடி
வளையுமிந்தக் காட்சிமிக இனிதே ஆ ஆ!
[தலைவாயிலை நெருங்கி]

நீரேந்து முத்துவட நிலையின் தோற்றம்
நிலவெல்லாம் குவிந்ததொக்கும் காட்சிதானோ?
[ என்று கூறிக்கொண்டே உள்ளே செல்கிறார் ] 12

**காவலன் 2:—** யாரையா? நீர்யார்? இங் கென்னவேலை?
யாதொன்றும் கேளாமல் உள்ளே செல்ல
யாருனக்குச் சொன்னார்கள்? பனைம ரம்போல்
யானிங்கு நிற்பதுகண் தெரிய வில்லை?
ஊரேதுன் பேரென்ன? உண்மையைச் சொல்
உருவியகை வாளுடன்யான் நிற்கும் போது
பாராமல் போகின்றாய் படியா முட்டாள்
பார்ப்பதற்குப் புலவரைப்போல் வேடம் வேறு. 13

**புலவர் :—** காவலனே! கருத்தெல்லாம் மன்ன வன்பால்
கடுகியதால் கண்தெரியா துள்ளே சென்றேன்
பாவலன்யான், பைந்தமிழைக் கற்ற குற்றம்
பரிசில்பெற எண்ணியிங்கு வந்தேன்.

**காவ 2 :—** என்ன?

நாவலரா? ஹிஹிஹ் நன்று நன்று!
நாளைக்கு மறுநாள்நீர் வரலாம் போம்போம்
காவலனை நோய்ஒருபால் வருத்த இந்தக்
கவிஞர்களும் கசக்குகின்றார் கவலை யின்றி. 14

**புலவர் :—** அறந்தெரிந்த கடைகாப்போய் அருமை மிக்க
வழிபலவும் கடந்துவந்தேன் அரசன் பக்கம்
பெறும்பரிசில் வேண்டேன்யான் பிணியால் வாடும்
பெருமகனைக் கண்டுவிட்டுச் செல்லுகின்றேன்
வெறுக்காமல் புலவர்பெருஞ் சித்தி ரன்என்
றியம்புகநும் வேந்தனிடம் விருப்ப மின்றேல் 15

**காவ 1 :—** மறந்தேன்யான் மன்னிப்பீர் மாட்சி மிக்கீர்!
மதியிழந்தேம் இப்பொழுதே தெரிவிக்கின்றேன்
வருந்தாமல் இவ்விடத்தில் அமர்க சற்றே
வருவேன்ஓர் இமைப்பொழுதில்

**புலவர் :-** வருக! நன்றி

புல :— (தனியே)

பொருந்தாத விதியேயுன் விளையாட் டிற்கோர்
பொழுதுமில்லை அளவுமில்லை புலவர் கட்கு
மருந்தனைய மன்னவனை நோயால் வாட்டி
மடிவிக்க வந்தாயோ மதியில் லாமல்;

காவ :— விருந்தாக வந்தபெரும் புலவர் ஏறே
வேந்தருமை அழைக்கின்றார் வருக!

புல :- வாழ்க! 16

## V

இடம்:- அரச மண்டபம். காலம்—பிற்பகல்.

தோன்றுவோர்—புலவர் இளவெளிமான்.

[அப்பொழுது இளவெளிமான் ஒரு பொன் முடிப்போடு புலவர் எதிர் வருகின்றான்.]

புல :- வாழியநீ இளவேந்தே! வளர்க உன்றன்
வள்ளன்மை! வாள்வீர வலிமை வாழ்க!
மேழிவளர் செல்வவளம் மிளிர ஓங்கி
மின்னிமழை பெய்துனது நாடு வாழ்க!
ஆழியுல கெங்கணும்சீர் பரவ நிற்கும்
அரசனையான் காணுமவா உடையேன் ஈண்டு.

இள வெளி :- எழிலிசைய தமிழ்வளர்க்கும் இனிமை மிக்க
எம்மன்னன் ஆணையிதை ஏற்க வேண்டும்! 17

அமருக செந்தமிழ்ப் புலவ! பரிசில் கொள்க!
அரசாங்க அலுவல் மிக இருத்தலாலே
உமதரிய பொன்மொழிகள் கேட்பதற்கிங்
கொழிவில்லை மறுசமயம் வாய்த்தால் பார்ப்போம்.

[வெளிமானைக் காண வருத்தத்தாலும் மதிப்பின்றித் தரும் பொருளாலும் புலவருளம் நைந்து கூறுகின்றார்]

புல :- எமதுரையும் இன்றமிழும் கேளாதீயும்
எப்பொருளும் யாம் வேண்டேம் இரப்பதற்குத்

தமருடனே வரவுமிலைத் தமிழைத் தாங்கித்
தகுதியறி தார்வேந்தைக் காணவந்தேன். 18

வரிசையறி வெளிமானின் பின்னே வந்த
வாள்வீர! வண்மையென்ப திரப்போர்க் கீயும்
பொருளளவில் நிற்பதொரு குணமோ? அன்றிப்
புன்மையுற்றார்த் தாங்குகின்ற குணமோ? அன்று;
பெருநிலனை ஆள்வோரும் பிறங்கு சீர்த்தித்
தரும்புலனை யாள்வோரும் ஒன்றே என்று
தெரியுமனம் வேண்டுமதன் திறமும் வேண்டும்
திக்கெல்லாம் அரசர்பலர் உள்ளார் அன்றே? 19

மன்னரொப்ப வரிசையில்லாப் பரிசை என்றன்
மனமொவ்வா தச்சிறுமை எனக்கே யன்றித்
தொன்னலஞ்சேர் தமிழ்த்தாய்க்கும் தூய்மை மிக்க
சொற்புலவோர் தமக்குமன்றோ இழிவை நல்கும்
மின்னலெனும் வாழ்வினுக்கா விரும்பி இந்த
மேன்மையிலாப் பொன்முடிப்பைப் பெற்றால் உன்றன்
முன்னவனும் வெளிமானின் முடிவில்லாத
மொய்ம்பு நிறை புகழ்குன்றும் வேண்டேன் வாழ்க!
[என்று கூறி வெளியே செல்லுகிறார்] 20

இடம் :— சோலைவழி காலம் :— மாலை.
தோன்றுவோர் :— புலவர்.

புல :— (தனியே)

ஈயெறும்பு வண்டு தும்பி விலங்குவானில்
ஏற்றமுடன் பறந்துசெலும் பறவை யாவும்
வாயசைத்துப் பிறரிடத்தில் கேட்ப தில்லை
வலிமையுறு மக்களென்போர் மான மின்றிப்
போயொருவர் பின்னிரந்து நிற்பார் இந்தப்
புதுமையினும் உலகினுளோர் புதுமை உண்டோ?
நாயையொத்த பிறவிகளும் மேலாம் இந்த
நன்றியிலாப் பிறவியொப்பத் தாழ்ந்த தில்லை 21

தீயவர்கள் பக்கமுறு செல்வமே நீ
செம்மையிலார் கைந்நிலவிச் செயல்கள் செய்வாய்
நேயமுற வாழ்பவரை நீக்கு வாயுன்
நிலையுணர்ந்தோர் பக்கத்தில் நிற்க மாட்டாய்
ஆயகலை அறிந்தவரை அணுகாய் ஞானம்
அற்றவரை யடைந்தங்குத் தூங்கு வாய்நீ
போயவிடத் துறைகுணத்தைப் போர் புரிந்து
போக்குதலிற் கருத்தூன்றிப் புன்மை செய்வாய் 22

இராகம்—மத்தியமாவதி

என்றாலும் உனைவேண்டார் உலகில் இல்லை
இனிமைபல உன்னிடத்தும் இருப்ப தாலே
குன்றாத வலியுடைய ராலும் நீ
குன்றிவிடின் உளங்குன்றி ஒளி யிழப்பார்
நன்றாக வேண்டுமென நீ விரும்பின்
நாட்டுவளம் நற்கலைகள் பெருகும் இன்பம்
நின்றோங்கும் இல்லறமும் நேர்மை யாகும்
நெஞ்சாமும் நிகழறமும் நிலைக்கு மன்றோ. 23

## VII

இடம் :- காட்டுவழி. காலம் :- பிற்பகல்.
தோன்றுவோர் :- பாணர்கள் புலவர்.

[பாணர்கள் மகிழ்ச்சியாக நடந்துகொண்டே வரும்போது ஒருவன் கூறுகிறான்.

விருத்தம்—இராகமாலிகை.

பாண 1:- கசியாத பெருமலையும் கடுவி லங்கும்
களிறுபுலி அரிமாவும் கவர்ச்சி கொள்ளும்,
நசையாகும் நல்லசுணம், நஞ்சு சேரும்
நாகமொடு கின்னரநற் பறவை யாவும்
இசையாலே உயிர்வாழும் அன்றோ; தாயும்
இளங்குழவிக் கருத்துவதும் அதுவே, வீரர்
இசைநோக்கி எழுச்சியுறு வார்கள் என்றால்
இதன்பெருமை யாரெடுத்திங் கியம்பு வார்கள். 24

[பாணர்கள் ஓரிடத்துத் தங்கிப் பாடி மகிழ்கின்றார்கள.]

முதனிலை.

இராகம்—சுருட்டி. தாளம்—ஆதி.

பாணர்கள் :—

யாதுசெய் வாய்இனி நீயே—உற்ற
கோதுடை நிரப்பெனும் கொடும்பவத்தோயே (யாது

இடைநிலை.

நீதி நல்லறம் நிறையொடும் போக்கினை
வீதிதோறும் நின்றேங்கிட ஆக்கினை (யாது

இறுதிநிலை.

அழுக்கொடும் பசிப்பிணி அலைத்திட விடுத்தனை
இழுக்கொடு யாவரும் ஏசிடப் படுத்தனை
சழக்கரின் அவைதனில் சார்புறக் கொடுத்தனை
ஒழுக்கமும் கல்வியும் ஒண்மையும் கெடுத்தனை (யாது)

நீர்திகழ் மாண்புயல் நிலைபெற ஊர்ந்திடும்
சீர்புகழ் குமணனின் செழுமலை சேர்ந்தபின்
ஊர்புகழ் செல்வமோ டொண்களி றார்ந்தபின்
ஆர்திறம் இன்றிநீ அழிந்தனை தீர்ந்தனை. (யாது)

[களிறும் பரிமாவும் சூழத் தேருடன், யாழுங் குழலும் இசைத்து வரும் பாணர்களைப் புலவர் கண்டு ஐயுறல்]

காணவொணுக் காட்சியுடன் களிறும் மாவும்
கதிர்பூக்கும் சிவிகையின்பின் குழலும் யாழும்
பேணவரும் இவன்யார்? இக்காண கத்தில்!
பெருமக்காள் ! யார்நீவிர் ? சிவிகையில் யார் ?

பாணர் :— பாணர்குலத் தவர்யாங்கள் பரிசு நாடிப்
பரந்தசெல்வம் குமணனிடம் பெற்று வந்தோம்

புல :— பாணருக்கே இத்தகைய பெருமை என்றால்
பைந்தமிழ்சேர் எனைக்கண்டால்-பார்ப்போம்-செல்வோம் 25

இசைவளர்க்கும் நன்மக்காள்! குமண வள்ளல்
இருக்குமிடம் செல்வதற்கு

பாண :— வழியா? கேள் இத்
திசைவழியே செல்க, கல்வி சிறந்தார்ப் போல
செம்மாந்த மலைகாணும் மலை கடந்தால்
வசையுடையார் மனம்போன்ற செறிந்த காட்டு
வழிகடந்தால் காதலனை நாடிச் செல்லும்
நசையுடையாள் போலவரும் நதியைக் காண்பாய்
நல்லிசையோன் நகரதற்குப் பக்கம்......

புலவர் :— நன்றி 26

## VIII

இடம் :— குமணன் ஊர். காலம் :— மாலை
தோன்றுவோர் :— புலவர்.

[ புலவர் பாணர்கள் கூறிய வழிகளைக் கடந்து குமணன் மாளிகை நோக்கி வருகிறார் ]

புல :— (தனியே)

நிலையுயர்ந்த நெடுமாடக் கோயில் என்றன்
நெஞ்சினிலே கற்பனையூற் றெடுக்கச் செய்யும்
தலைவாயில் காவலின்றி உளதே ஆ ஆ!
தமிழ் மணக்கும் இவ்விடத்தில்......
[ என்று கூறிக்கொண்டு அரண்மனை வாயிலுட் புகுகிறார் ]

இடம் :— அரண்மனை உள்மண்டபம்.
காலம் :— காலை.
தோன்றுவோர் :—புலவர்—குமணன்

[ உள்ளே புலவரைக்கண்ட குமணன் அவருடைய தோற்றத்தால் உயர்ந்த அறிஞர் என்று கருதி ]

குமணன் :— வணக்கம் ஐயா!

கலைகளறி புலவரெனக் காணுகின்றீர்
கருதிவந்த தென்? எனக்குப் பணிதல் வேண்டும்.

புலவர் :— மலைவியக்குந் தோளுடையோய்! குமண னென்னும்
வள்ளல்தனைக் காணவந்தேன் பெருஞ்சித்ரன் யான் 27

கும :—வரவேண்டும் வரவேண்டும் அறிஞ! தங்கள்
வரவெமக்கு நல்வரவாய் மிளிர்க! என்றன்
சிரமேறக் கைகுவித்து வணங்கு கின்றேன்
தேர்ந்த பெருஞ் சித்திரனும் புலவ! வானில்
அரசேற்ற இந்திரனும் அடைய ஒண்ணு
அருந்தமிழின் சுவையளிக்கும் அறிஞ! எங்கள்
பெருவாழ்வே! நறும்புலவ! பீடு சான்ற
பைந்தமிழ்த்தாய் நன்மகனே! வம்மின்! வம்மின்! 28

[பாணர்களின் கூற்றுலும், அன்போடும் உரிமையோடும் வரவேற்பதாலும், குமணனே என்று தெளிந்து]

புல :- பெருங்குணக்கள் குடியிருக்கும் பேழை யொப்பாய்!
பெருவானிற் கொடைபொழியும் முகிலே! உன்னைப்
பொருந்தாத பகைவருக்குப் புனத்தை நல்கிப்
புலவருக்கும் பாணருக்கும் பொன்னும் நாடும்
வருந்தாமல் வழங்குகின்ற வள்ளால்! வாழ்க!
வண்டமிழோர் உரைப்பெருளாய் விளங்கி வாழ்க!
விருந்தாக வந்த எனை எளிமையோடு
வியப்படைய வரவேற்கும் அன்பென் சொல்வேன் 29

இராகம்—காம்போதி

மழைஎல்லாம் உன்னாட்டில் வாழ எண்ணி
மலைகள்தொறும் மண்டிநிற்கும் காட்சி கண்டேன்
முழவொலித்து யாழிசைக்கும் பாணர் உன்றன்
முதிரமலை அகலாத முழக்கங் கேட்டேன்
அழகுதவழ் விறலியரின் ஆடலில் உன்
ஆண்மையொடு மேன்மையுமே கண்டேன் செஞ்சொல்
பழகுதமிழ்ப் புலவருன்றன் பண்பை எண்ணிப்
பலப்பலவாம் பாட்டிசைத்தும் முடிவு காணர் 30

இராகம்—கேதாரகௌளம்.

புலவரெனும் புள்ளினங்கள் உண்டு வாழப்
பொற்கனிகள் தந்துதவும் தருவே! இங்கு
நிலவியெமை வருத்துகின்ற வறுமை என்னும்
நீளிரவை மாய்க்கவந்த கதிரே! செந்நெல்
நலனழிக்கும் கடுங்கோடை மாற்ற வந்த
நறுமுகிலே! பெருமழையே! பசிப்பிணிக்கோர்
வலநிறைந்த மருந்தே! நற் கலைகளென்னும்
மகவுதமை வளர்க்கவந்த செவிலித் தாயே! 31

குமு:- கலைவளர்த்தல் கண்ணுக்கும் மொழிவ ளர்த்தல்
கதிர்வளரத் துணைசெய்தல் காவல் செய்தல்
தலையாய புலர்களின் தகுதி போற்றல்
தஞ்சமென வந்தவரை நெஞ்சந் தேற்றல்
கொலைமுதலாம் கொடுஞ்செயல்கள் நீக்கல் நாட்டின்
குறைதவிர்த்தல் குறும்பொழித்தல் குடிப்பி றந்தோர்
நிலையுயர்த்தல், நெருங்குபகை தேய்த்தல் யாவும்
நீங்காத கடமையன்ரே? மன்னர் கட்கு 32

என்கடமை அன்றியொன்றும் சிறந்த தாக
என்செய்தேன்? இவ்வளவு புகழ்சி கொள்ள!

புல:- இன்புடைய அரசேயுன் எளிமை தன்னல்
என்னுளத்தை என்றென்றும் அடிமை கொண்டாய்
தன்னுடமை என்றெவையுங் கருதா தீயும்
தகுதியினைப் புகழ்வதற்குத் தமிழே இல்லை.

குமு:- என்னுடைய பொருள்என்னற் குரிமை உண்டோ
இறையவனின் ஏவலரே உலகில் எல்லாம் 33
பெருமரங்கள் பழுத்துதிர்க்குங் கனிகள் தம்மைப்
பின்அவையே உண்டுகளிப் புறுமோ? வானில்
கருமுகிலும் கடல்முகந்த நீரை மீண்டும்
கடலுலகிற் பெய்வதுவும் கண்டோ மன்றே?

புல:- செருமுனையுள் சிங்கமெனும் குமணு! இங்குத்
திருமகளைக் கலைமகளோ டின்று கண்டேன்

மருவகன்ற தண்மதியை ஒப்பாய்! உன்றன்
மாட்சிகண்டு கடல்புவியும் மருட்சி கொள்ளும் 34

இராகம்—பைரவி

கும :— ஒழுக்கமுயர் நீதியறம் உறுதி நல்கும்
ஒண்பொருளின் திறமுணர்த்தித், தீமை சேர்க்கும்
இழுக்கமிவை எனவிளக்கி, இருமைப் பண்பின்
இலக்கணத்தைத் தெளிவுபெற இயம்பி, ஈண்டுச்
செழிப்பதற்குப் பொருள்தேடும் வகையும், ஆங்கே
செலவுசெயும் நெறிபலவும் சிறபக் கூறித்
தழைக்கும்வகை மாந்தருக்குச் சாற்றி நிற்போர்
தமிழறிஞர் அன்றிஇங்குத் தகுவோர் யாரே? 35

கல்விமகிழ் கவியரசே! பன்னாள் தங்கிக்
களைவளத்தை நல்கியின்னும் அரசற்குற்ற
பல்வகையாம் நெறியனைத்தும் பகர்ந்து நல்ல
பண்புடைய னுக்குதலை விரும்பு கின்றேன்.

புல :— நல்வளஞ்சேர் மன்னவ! நீ விரும்பு மாறே
நான்ஈண்டுத் தக்கிவிடின் நலிவால் வாடும்
இல்லவளும் இனியசிறு மகவும் தாயும்
என்னுறுவார்? என்கடமை மறத்த லாமோ? 36

என்னுடனே உள்ளமதை அனுப்பி அங்கே
என்புடலை எனக்காகத் தாங்கி நிற்கும்
பொன்னெடுநற் கலையறியாள், புதல்வற் குற்ற
புன்பசியைப் போக்கும்வகை காணு ளாகிச்
சின்மொழியால் மீன்காட்டி மதியங் காட்டிச்
சிறுபூனை வருமென்றும் தேற்றத், தேரா
நன்மகற்குப் புலியென்றும் பூத மென்றும்
நாக்குழறி அச்சுறுத்த நாளும் நாளும் 37

இப்பழமை தெரிந்ததனுல் அழுதல் நீங்கா
இளங்குழவி முகநோக்கி, "கண்ணே! உன்றன்
அப்பனுடன் கோபிக்கும் முகங்காட்" டென்ன
அழகுசெய முகம்வலிக்கும் மகவைத் தாங்கி

உப்பொழிந்த கீரையினை உண்ணா வாளென்
உள்ளத்தை விட்டொழிந்தால் அன்றோ யானும்
செப்பரிய செந்தமிழால் கவிகள் சொல்வேன்
சீரியநல் அறமுறைப்பேன் பிறவும் செய்வேன் 38

கும :- அணிவிளங்க நீருரைத்த எல்லாம் நல்ல
அருங்கவிக ளாமன்றோ? அறிவின் மிக்கோய்!
மணிநிறையும் மாளிகையில் உள்ள வெல்லாம்
மாண்புடையோய் நும்பொருளே யாம்நீர் வேண்டும்
பணிபுரிவோர், தேர், பரி, மா யாவும் கொள்வீர்!

புல :- பண்புகளுக் கோருருவே! எம்மையுற்ற
பிணியொழித்த பெருமகனே! பெம்மான்! உன்னைப்
பெற்றதமிழ் நன்னாடு வாழ்க! வாழ்க! 99
வாயற்ற முல்லைக்குத் தேர்வ ழங்கி
வண்மையுற்ற 'பாரியொடு' வல்வில் ஓரி
சேயொத்த 'மலையன்' சீர் 'எழினி' பேகன்
செறிந்தபுகழ் 'ஆய்,' 'நள்ளி' இவர்க்குப் பின்னே
தாயொத்த அன்புடனே தமிழ் வளர்க்கும்
தகவுடைய குணக் குன்றே! குமணா! உன்றன்
நேயத்தை விரும்பார்இந் நிலம் விரும்பார்
நெடுவேலோய்! வாழியநின் செங்கோல் வாழ்க! 40

சின்னாளில் வருவேன்உன் அன்பால் என்றன்
சிந்தையினைப் பிணித்துவிட்டாய், சென்றுமீள
உன்னாவால் உவந்துவிடை அளிக்க வேண்டும்
உயர்புகழால் மேருவினும் தூயோய்.........

கும :- நன்று

கொன்னேயென் நாள்கழியும் முன்னே வந்தென்
குறைதவிர்க்க வேண்டும்நறுஞ் சீர்த்தி மிக்கோய்!
பொன்னேரும் கவிபொழியும் புலவ ரேறே!
போய்வருக! பூத்தொளிரும் மகிழ்ச்சி மேவ. 41

[புலவர் விடைபெற்றுச் சென்றதும் அவர் தம் அறிவு நிலையை எண்ணிப்பாடுகிறான்.]

குமணன் :—

இராகம்—நாட்டக்குறிஞ்சி. தாளம்—ஆதி.

முதனிலே.

ஆருயிர்க் குயிர்ந்தது அறிவெனும் பொருளே
அதையிழந் தோரை அடைந்திடும் இருளே (ஆரு)

இடைநிலே.

சீருடன் செல்வமும் சேர்ந்திருந்தாலும்
சிறப்பமை ஆட்சி செறிந்திருந்தாலும் (ஆரு)

இறுதிநிலே.

நேர்மையும் அன்பும் ஒழுக்கமும் நிறைக்கும்
நீதியைச் சேர்ந்துளத் துன்பினேக் குறைக்கும்
வீரமும் ஆட்சியும் வேண்டிடிற் கொடுக்கும்
விரும்பிய யாவையும் நம் வயப்படுக்கும், (ஆரு)

X

இடம் :— அரண்மனே மேன்மாடம், வாயில், கடிமாம்
காலம்—முற்பகல்
தோன்றுவோர்:- இளவெளிமான்—புலவர்—பணியாளர்.

[விருதுகள் புடைசூழ் கரியும்மாவும் பின்வர சிறப்பாக வரும் புலவரைப் பார்த்து ஐயுற்று]

இளவெளிமான் :—

தேருடனே பரிமாவும் களிறும் சூழச்
சிறப்புடைய விருதுகளும் தாங்கி எங்கள்
மேருவெனும் அரண்மனேயை நோக்கி மிக்க
விளக்கமுடன் வருவதனேப் பார்த்தால்...—போர்க்கு
வீரமுடன் வரும்பகையாய்த் தோன்ற வில்லே
வீரர்களும் படைக்கலமும் இன்மையாலே.
யாரிவர்கள்? அஞ்சாத வருகை நோக்கின்
யான்கருதும் சித்ரரசர் ஆக மாட்டார்......!

யாழிசைக்கும் பாணரெனின் வறுமைச் சுற்றம்
யாதுமின்றி வரமாட்டார்...பார்ப்போம்...ஈண்டோர்
நாழிகையில் வரத்தானே செய்வார்...இஃதோ...!
நண்ணிவிட்டார்...என்னஇது ! மரங்கள் தோறும்
சூழிகைசேர் யானைகளைக் கட்டு கின்றார்...?
தூயகடி மாஞ்சூழ்ந்தார்...! போய்நாம் கேட்போம்

[ என்று கீழே இறங்கிவந்து வாயிலை அடையும் போது புலவரும் எதிரே செல்லுகிறார் ]

புல :— வாழியநீ ! வழிபெருகி வளர்க வேந்தே !
வறுமைதனை வென்றுவரும் சித்தி ரன்யான் 43
முன்னமொரு காலத்தில் ஈண்டு வந்த
முதியவன்யான் புதியனலேன், ஆனால் அன்று
சின்னமிலை தேர்பரிமா பணியாள் இல்லை
செந்தமிழாம் அணியொன்றே திகழ நின்றேன்
பன்னரிய கவிப்பொருள்சேர் கலைஞர் தம்மைப்
பரிந்தழைத்துப் பற்பலவாம் பரிசில் நல்கும்
மன்னவர்கள், மாண்புமிக்க வள்ளல், மேலோர்
மண்ணுலகில் மறையாமல் இன்றும் உள்ளார் 44

சேவலொலி எழுப்புவதால் கிழக்கு வானில்
செங்கதிரோன் முளைப்பதிலை, குயில்கள் வேண்டிக்
கூவலினல் தென்றலிங்குக் குவிவ தில்லை,
கூடிநின்ற தவளைகளின் குரலைக் கேட்டுத்
தாவிமழை பொழிவதிலை, தானை வேந்தர்
தரும்பொருளால் தமிழ்வளர்ந்து தழைப்ப தில்லை
யாவுமதன் இயற்கையினல் இயங்கி வாழும்
யாமும்எம் நெறிபிறழ வாழ்வ தில்லை. 45

புல்லுணவைப் புலிபசித்தும் உண்ப தில்லை ,
பொலிவதிலை தாமரைஅம் மதியைக் கண்டு,
மெல்லுவதால் கரும்புசுவை மெலிவ தில்லை,
மெலிவதனல் சந்துமணங் குறைவ தில்லை
நல்லவரும் நவையுடைய பொருளுக் காக
நாணீங்கி வாழுதலை விரும்பார் பூத்த

முல்லைதனை வாடாமல் காப்ப தற்கு
முழுத்தேரை வழங்கினனோர் அரசன் முன்னே 46

இரப்போரின் தகுதியினை எண்ணு தென்றும்
ஈவோர்தம் தகுதியினை எண்ணி நின்று
கரப்பில்லா நெஞ்சத்தால் கடுகி, வேந்தர்
கலைஞர்களைக் கண்ணெனவே கருதி, நாளும்
புரப்போரே புரவலராம் புலமை மிக்கோர்
பொங்குவரேல் போரின்றி உலகம் மாயும்
விருப்போடு வாழ்த்துவரேல் வளமை மேவும்
வெற்றியொடு புகழ்நிலைக்கும் மேன்மை பூக்கும் 47

கோடுயர்ந்த களிறுகளைக் காண்க! மன்ன!
கொண்டுவந்த பரிசிலிவை, குமண வள்ளல்
பீடதனில் விளங்குதலும் காண்க! அன்று
பெரும்பொருளை ஏற்காத பிழைபொறுத்த
ஆடுநடைப் புரவியுடை அரசே! தங்கள்
அன்பென்றும் மறவேன்யான் செல்லுகின்றேன்

[என்று கூறிச்சென்றவுடன் அவருடைய பெருமிதங்கண்டு இளவெளிமான் நாணி]

**இளவெளிமான் :-**

நாடுமகிழ் புலவருடை யுள்ளம் என்னை
நாணமுறச் செய்ததனை இன்று கண்டேன் 48
பொருளாலும் போரிடத்துப் புறங்கொடாது
பொலிவுதரும் படையாலும் வீரத் தாலும்
மருளேறும் அரண்சூழ்ந்த மனையி னாலும்
மணிகளொடு பொன்னாலும் உயர்ந்து நின்றேன்
தெருளுடைய மனமெனக்கு வாய்க்க வில்லை
தீப்பொருள்கள் யாவையெனத் தெரிய வில்லை
அருளாத நெஞ்சுடையேன் ஆசை வஞ்சம்
அச்சமெனும் பேய்களுக்கே அடிமை யானேன். 49

## XI

இடம்—சோலை வழி. காலம்—முற்பகல்.
தோன்றுவோர்—பணியாளர்—புலவர்.

**பணியாளர்கள்.**

எல்லோரும் வேண்டுவது இன்பமே—ஆனால்
இவ்வுலக வாழ்வெல்லாம் துன்பமே
கல்லாத பேர்களுக்குத் துன்பமே—இங்கு
கற்றவரைவிட அவர்க்கு இன்பமே
செல்வமிலா வாழ்வு மிகத் துன்பமே—தீங்கு
சேர்க்கும் பொருள் இல்லையெனில் இன்பமே
வில்லெடுக்கும் வீர வாழ்க்கை துன்பமே—பொல்லா
வெற்றுடம்பாய் மாள்வதினும் இன்பமே
பரிசு கொள்ளும் வாழ்வு மிக இன்பமே—பாரில்
வரிசை தெரி மன்னர் காணல் துன்பமே.
விலங்குயிராய் வாழ்தலிங்கு இன்பமே—வேடர்
வில்லுதைக்கும் கணை தெரியின் துன்பமே
பறவைகளாய்ப் பறந்துயர் தலின்பமே—பாழும்
வலை புகுந்து வாழ்தல் பெருந் துன்பமே
கலங்கு முயிராய்ப் பிறத்தல் துன்பமே—யாரும்
கடமை தவறு திருந்தால் இன்பமே.
இன்பமே—யாவும்—இன்பமே—ஏற்ற
வழி நடந்தால் யாவருக்கும் இன்பமே (இன்)
[என்று மகிழ்வுடன் பாடிச் செல்லுகின்றனர்.[

## XII

இடம் :— புலவர் வீடும் வெளியிடமும்—காலம் மாலை
தோன்றுவோர்—புலவர், கலைச்செல்வி—பணியாளர்
[வீட்டை நெருங்கிக் கதவைத்தட்டி]

புலவர் :— தேனூரும் நன்மொழிசேர் நங்காய்! உள்ளம்
செம்மை நிறை கலைச்செல்வி!

[ கணவனுடைய வரவை எதிர்நோக்கி இருந்த கலைச்செல்வி புலவருடைய குரல் கேட்டு விரைந்து வந்து வணங்கி ]

கலைச்செல்வி :—

ஊனுரும் உயிரே ! யான் உய்ந்தேன் இன்றே
    ஒளிபெற்றேன் அன்பே! என் இறையே ! வாழ்ந்தேன்
வானுரும் மழைபிரிந்த பயிரைப்போல
    வண்கதிர்கள் பிரிந்தஇருள் வானம் போல
மீனுரும் புனலில்லாக் குளங்கள் போல
    மெலிந்துடலைத் தாங்கிநின்றேன் இனியுந் தாளேன் 50

புல :— குணம்திரண்ட உருவே ! நம் குறையைப்போக்க
    குமணவள்ளல் தந்த பெரும் பொருளைக் காண்க
[ அவைகளைப் பாராமலே ]

கலை :- மணம்புரிந்த மங்கையர்க்கு மணவா என்தான்
    மதிப்பரிய செல்வம்அதை இன்று பெற்றேன்
பணம் திரண்டால் பதிக்குநிகர் ஆமோ ? தங்கள்
    பாதமலர் சூடுவதே பரந்த இன்பம்

புல :- மணம்பொதித்த மலரே ! நம் மைந்தன் என்னை
    வெகுண்டுவக்கும் முகத்தையினி மறப்பா னன்றே ! 51
[ பின்னர் அச் செல்வமெலாம் கண்ணுற்று ]

கலை :- அறம்பயின்றார் உள்ளம்போல் அகன்ற செல்வம் !
    அள்ளியள்ளிக் கொடுத்திடினும் அளவில் காலம்
சிறந்தோங்கத் தந்தபெரும் வள்ளல் வாழ்க !
    செந்தமிழ்போல் அவன்குலமும் செழித்து வாழ்க !
மறம்பயின்ற வறுமையினி என்ன செய்யும் ?
    மகிழ்ச்சிவளர் பெருமாத்தைக் கொண்டு வந்த
திறம்பயின்ற என் தலைவா ! இனிமேல் தாங்கள்
    திசைகள்தொறும் எனைப்பிரிந்து செல்ல வேண்டாம் 52

புல :- ஆடிவரும் அருவியொப்ப ஓரிடத்தில்
    அமையாத செலவுடனே அகன்ற வானில்

கூடியொரு நொடிப்பொழுதில் குலைந்து தேயும்
குறுமேகம் போன்றஇந்த செல்வந் தன்னைத்
தேடிமிக அடைந்திட்டோம் தீங்கில் லாமல்
திசைபுகழ வாழ்திடுவோம் என நினைத்து
மூடிவைத்து வாழ்வதனை மூறையன் றென்ற
முதியபெரும் அறிஞருரை உணராய்? மாதே! 53

நிலையில்லாச் செல்வமதை வழங்கிவாழும்
நேர்மையுடை அரசரையே உலகம் போற்றும்
விலையில்லாக் கலைகளறி புலவோர் யாரும்
விரிந்தவுல கெங்கணுமே சென்று சென்று
கலையெல்லாம் பரப்புவதைக் கடனுக் கொண்டார்
கடலுலகம் செம்மையுறல் அதனுல் அன்ருே?
தொலைவில்லாப் பொருளிருந்தும் அறிஞர் எல்லாம்
துன்புறினும் தன்கலையைப் பரப்பு வார்கள் 54

ஆதலினுல் அன்பே !இச் செல்வந் தன்னை
அன்பரிவர் பகைவரிவர் உறவி வர்கள்
ஏதமுற்ற போதுதவி செய்தவர்கள்
இல்லைஎன்ருர் இவரிவரொன் றெண்ணு துன்றன்
கோதகன்ற சுற்றம்நம் குலத்தில் வந்தார்
குறையுற்ருர் யாவர்களும் கேட்ப தெல்லாம்
நாதனைக்கேட் டீந்தருள்வோம் என்றெண் ணுமல்
நாளுளும் கொடுப்பதுன்றன் கடமை யாகும். 55

[ புலவருடைய விரிந்த உள்ளத்தைக் கண்டு வியந்து ]

கலை :- மண்ணுலகும் பெருவானும் தங்கள் உள்ளப்
பரப்புகண்டு நாணுமெனல் மிகையோ? நாதா!

புல:- பண்ணுருகும் மொழிப்பாவாய்! பைந்த மிழ்நூற்
பரப்பெல்லாம் ஓதுபொருள் இதுவே யன்ருே?
கண்ணுடையோர் எல்லோரும் கண்ட நல்ல
கருத்துமிக்க அறமிதுவே கடவுள் தந்த
எண்ணற்ற பொருள்யாவும் மக்கள் எல்லாம்
இன்பமுற இணைந்தொன்றி வாழ்வ தற்கே

## [கலைமகள் வாழ்த்து]

இராகம் :—சரஸ்வதி    தாளம் :—ஆதி

கலைச்:—

### முதல் நிலை

கலைமகள் மலரடி இணையே—பெரும்
கவலைகள் போக்கிடும் துணையே (கலை)

### இடை நிலை

அலகினில் இன்பம் அமைந்தநற் சுவையே
அன்புடன் பண்பும் அளித்திடும் அவையே (கலை)

### இறுதி நிலை

பரவுமிவ் வுலகினில் பதம்பல கொடுக்கும்
பாவமும் தீமையும் பாழ்படக் கெடுக்கும்
அரசரின் உயர்ந்த அரும்புகழ் நிறைக்கும்
அறிவெனும் ஒளியினை அணிபெற விரிக்கும் (கலை)

[எனக் கலைமகளை வணங்கி மகிழ்கின்றனர்]

(உரிமைபெற்றது)

முற்றிற்று.



# கண் முன்னே கவி அரசர்.

மங்கையர்க்கரசி.

"அன்பு நாண் ஒப்புரவு கண்ணோட்டம் வாய்மையொடு
ஐந்து சால்பு ஊன்றிய தூண்."

அன்பின் உருவம். அமைதியின் பிறப்பிடம். எளிமைக்கோர் எடுத்துக்காட்டு. இன்சொல் நிலையம். சலியா முயற்சி. தளரா ஊக்கம். அசையா உறுதி.

கல்வியில், பண்பாட்டில், தமிழ்க் கலையில், இலக்கியச் சிறப்பில், இறைவழிபாட்டில், ஈகைக் குணத்தில், இனிய சொல் வன்மையில், அன்பில், சிறந்தவர் கவியரசர். தாய் மொழிக்குத் தொண்டு. தமிழன்னைக்குக் கவிமாலைகள், பாடிய வாய் தேனூறும் கவிகள். பழைய நூல்களில் ஊறிப்பயின்று தமிழ் மரபும் பண்பாடும் மலர்ந்த உள்ளம். காலப் போக்குக்கும் நாகரிக வளர்ச்சிக்கும் ஏற்ற உவமைகள் அவர்கள். யாவருடனும் பேரன்புடனும் மரியாதையுடனும் நடந்து கொள்ளும் தன்மை அனைவரும் அறிந்தது. கற்றோர்—கல்லாதார், முதியவர்—இளையவர், ஆசிரியர்—மாணவர், உற்றோர்—மற்றோர், அறிஞர், வறிஞர், கலைஞர், சிறுமிகள், பெண்கள் அனைவரிடத்தும் இனிய முகத்துடன் பேசிப் பழகுதல் அவர்கள் இயல்பு.

பிறரை ஊக்குவிக்கும் பண்பு அவர்களுக்குத் தனிச் சிறப்பு. புலவர்களையும், மாணவர்களையும், ஏனையோரையும் அவர்களது முயற்சியில் ஊக்கித் தம்மால் இயன்ற உதவிகளை அவ்வப்பொழுது செய்யும் இயல்பு அவர்களது. பெண்ணுரிமை பேணும் பெம்மான் எங்கள் கவியரசு.

நகைச்சுவை ததும்பும் சிறு கதைகள். சிறுகதைக் களஞ்சியம் எனில் மிகையில்லை. தூயபேதுருக் கல்லூரியில் ஆசிரியராக இருந்தபொழுது அன்றன்றைய நிகழ்ச்சிகளை மனைவியாரிடத்தில் சொல்லும் வழக்கமுண்டாம். தமிழ் ஆசிரியர் என்றால் மாணவர்களின் கேலிக்கும், விளையாட்டிற்கும் எல்லையில்லாத காலம் முப்பது ஆண்டுகட்கு முன்னர் தமிழ் ஐயா வகுப்பைப் பொழுது போக்கிற்கு உபயோகித்துக் கொள்வார்களாம். ஒரு நாள் எதிர்பாராதது கண்டனர் மாணவர்கள். புத்தம் புதிய சைகிளில் வெண்ணிற உடையும் கோட்டுமாக வந்திறங்கிய தமிழ் ஆசிரியர்தான் அதற்கு காரணம் "ஏய், நம் தமிழ் ஐயா சைக்கிளில் வந்திறங்குகின்றாரடா," என்கிறார் ஒரு மாணவர். அடுத்தநாள் மற்றொருவர் "கூலிங் கிளாஸ்கூட அணிந்துள்ளாரப்பா," என்கிறார். ஆசிரியர் எந்த ஊரப்பா? என்று மாணவர்கள் ஆராய்ச்சி செய்கின்றனர். கண்டர் கோட்டையிலிருந்து நாலுகல் தொலைவிலிருக்கும் யோகனூரைச் சேர்ந்தவர் என்று அறிகின்றனர். நாட்டுப்புறம் ஆசிரியர் தெற்கத்தியார் என்பதைச் சுட்டிக்காட்ட எண்ணங்கொண்ட ஒரு மாணவர் தமிழ் வகுப்பில் எழுந்திருந்து, "ஐயா என்னை இந்தப் பையன் தெற்கத்தியான் என்று சொல்லுகிறான் என்றாராம். கொல்லென மாணவர்கள் நகைத்தனராம். ஐயா அவர்கள், "சரி அப்பா நான் சொல்வதைக் கேளுங்கள்," என்று பாடப் புத்தகத்தை மூடி வைத்துவிட்டு, எனக்குத் தெற்கத்தியான் முதல் பலகையில் அமர்ந்திருக்கும் மாணவன் [பெஞ்சுகள் தெற்கு வடக்காகப் போடப்பட்டிருந்தன அவருக்குத் தெற்கத்தியான் அவர்பின் உள்ளவர்—தஞ்சையில் இருப்பவனுக்கு தெற்கத்தியான் குமரியில் இருப்பவன்—தஞ்சைக்கு வடக்கே இருப்பவனுக்குத் தஞ்சையில் இருப்பவன் தெற்கத்தியான்—வடதுருவத்தில் இருப்பவனைத்தவிர ஒருவனுக் கொருவன் தெற்கத்தியான் ஆக அனைவரும் தெற்கத்தியான்தான் கவலை வேண்டாம் என்று கூறினார்களாம். மாணவர்கள் தெற்கத்தியாரின் திறமையைக் கண்டு இறும்பூதெய்தினராம். இது

'தெற்கத்தியான் கதை'' என்று கூறுவார்கள். ஐயா அவர், கள் நண்பர்களுடன் திருவையாற்றிற்கு செல்ல ஒரு குதிரை வண்டி பேசினார்களாம். வண்டிக்காரன் விரைவாக ஓட்டிச் சென்றானும். சாலைகள் சரிவர இல்லாத காலமாம் அப் பொழுது. பள்ளியக்கிரகாரத்துக்கு அருகில் ஒரு பெரும் கொடியில் கொண்டு விட்டானும். அனைவரும் தலையைத் தடவிக்கொண்டு கீழே குதித்தார்களாம். ஐயா அவர்கள் அவன்மேல் குற்றமில்லை ''ஒரு நொடியில் தானே கொண்டு விடுகிறேன் என்று கூறினான். சொன்னபடி கொண்டு சேர்த்துவிட்டான்,'' என்று கூற உடனிருந்தவர்கள் நகைத் தனராம். இவ்வாறு ஐயா கூறும் கதைகள் எண்ணிறந்தன. கவிந்த அரசமரத்தின் கீழிருந்து படித்தது பற்றியே தமக்குக் 'கவியரசு'' என்ற பெயர் வந்தது என்று வேடிக்கையாகக் கூறுவதுண்டு.

இவர்கள் வகுப்பில் என்றும் அமைதி நிலவுமாம். கதை கள் கூறி மகிழ்விக்கும் ஆசிரியரைக் கண்டால் மாணவர்கள் மகிழ்வது இயல்புதானே. காலை ஐந்து மணிக்கு எழுந்திருத் தல் வேண்டும். குளித்து, சந்தனப் பொட்டணிந்து உடை உடுத்தி உணவருந்தி அவர்கள் வேலை முடிந்துவிடும். பிற பின்னர். தமிழன்னையுடன் அளவளாவுதல். மாணவர்கள் ஒவ்வொருவராக அவர்களைக் காண வரும்பொழுது இருவர் உரையாடலும் செவிக்கோர் விருந்து. சோம்பல் அவர் களுக்குப் பிடிக்காது. குடும்பத்தில் வேண்டும் ஒவ்வொன்றும் அவர்கள் அறிவார்கள். அடுதல் பசுவைப் பராமரித்தல் இல்லத்தூய்மை அவர்கள் அறியாததொன்றில்லை.

மாணவர்களிடம் பெற்ற தந்தையினும் உற்ற தந்தையா கத்தான் பழகுவார்கள். அறிவுரை கூறுவதும் அவ்வாறே. பிறரைப்பற்றிக் குறை கூறுவதென்பது அவர்கள் அறியாதது. குற்றம் செய்தவர்கள் இருப்பினும் அவர்கள் குறையை ஒருவ ரிடத்தும் கூறுவதில்லை. அன்பு காட்டாதும் இருப்பதில்லை

தமக்குப் பிடிக்காத ஒன்றை நேரிடையாகத் தெரிவிப்பதில்லை ஒரு சிறுகதை வாயிலாகத்தான் கூறுவார்கள். நண்பர்களோ பிறரோ ஒருவருக் கொருவர் மனவேற்றுமையுடனிருந்தால் அவர்களிடம் வலியச் சென்று அவர்களை ஒற்றுமையாக வாழ அறிவுரை கூறாமல் இருக்க அவர்களால் இயலாது. பிறர் இன்பங்களிலும் துன்பங்களிலும் ஒருங்கே பங்கெடுத்துக் கொள்வார்கள். அன்பு தவிர வேறொன்றறியாத உள்ளம். பாடல் வேண்டும் என்று ஒருவர் விழைந்தால் ஒருமணி நேரத்திற்குள்ளேயே இனிய கவிகள் பல உருவாகி விடும். சிறந்த மாணவர்களை, அவர் என் மகன் என்றே கூறுதல் அவர்கள் இயல்பு. அவ்வாறே உற்ற தந்தையாய் விளங்கினர். ஐயா அவர்கள் மைத்துனருக்கு ஓர் பெண் மகவு பிறந்தது. நான் பெண்மகவாய் பிறந்ததிலே எந்தையர்க்கு ஒரு ஏமாற்றம். ஒரு வீட்டில் உடனிருந்த மாமா கவியரசருக்கோ கரைகாணாக் கடல் இன்பம். "என் செல்வ மகனுக்கு மனைவி இசைந்ததுவே" என்று அன்று அடைந்த மகிழ்ச்சி அணுவளவும் குறையவில்லை! இன்றளவும்!

ஒரு வயது ஆகுமுன்னே ஓடோடிப்போய் விடுவேன் அன்போடு அரவணைக்கும் மாமாவைத்தேடி. மாதங்கள் தவழ்ந்தன. மழலைமொழி பிறந்தது. மடிவளர்ந்த செல்வம் நான். பாப்பா எனக் கூப்பிட்டு பாடல்பல கூறிப் பன்னும் மொழிகேட்டுப் பார்த்து மகிழ்ந்திடுவர். "வெண்ணாற்று மணலினிலே விளையாட்டு அயரப் பார்த்திருப்பர்" வெள்ளி விழா மன்றினிலே வேடிக்கைப் பேச்சும் கண்டிடுவர்" பாடல் பல கேட்டு மகிழ்ந்திடுவர், மணமாகு முன்னரேயே மருமகள் என உரைமுடிப்பர். இடமாற்றம்; மனமாற்றம், இல்லை! இல்லை! மகனுக்கு மணமுடித்தே மகிழ்வுற்றார். மணி, மங்கை கண்ணிற் கருமணிகள். மண்மூடும் அன்ற அகளவும் விழித்திருந்து காத்து வந்தார். தள்ளாத காலத்தும் ஆல மரத்தடியில் தவங்கிடந்து ஆறுதல் கூறிடுவர்.

கரந்தைத் தமிழ்ச்சங்கம் தோற்றுவித்த நாள் முதலாக இறுதிநாள் வரை சங்கத்திலேயே அவர்கள் பொழுது கழிந்தது. ஐயாற்றில் இருந்த காலத்தும் நாளொரு முறையாவது சங்கத்திற்கு வந்து அன்பர்களுடன் அளவளாவிச் சென்றாலன்றி அவர்களுக்கு மன நிறைவு உண்டாகாது. ஐயா அவர்களை "மோகனூருக்கு வந்து இருங்கள்" என்று அவர்களது தம்பி அழைத்தனராம். ஐயா அவர்கள் மகன் ஐந்து வயதுச் சிறுகுழந்தை அருகில் நின்றிருந்தாராம். "அப்பாவையா, மோகனூருக்கா! சங்கம் மோகனூருக்கு வந்தால்தான் அப்பாவும் வருவார்கள்" என்று கூறினார்களாம். சங்கம், பொழில், அன்பர்கள் இவர்களுடன் இரண்டறக் கலந்திருந்தார்கள். நடக்க இயலாத போதும் தள்ளு வண்டியில் அமர்ந்திருந்தாவது சங்கம் வந்து திரும்புவார்.

அணிகள் முதலாயவற்றிற்கு விழைவது, அவர்கள் ஒவ்வாத வொன்று. ஆயினும் அவர்கள் தமிழன்னையின் அணிகளை அழகாகக் கூறுவார்கள். தொல்காப்பிய நூல் மங்கலநாண். அமிழ்தினுமினிய வள்ளுவன் குறள் செம்முகச் சுட்டி, தங்கு கழுத்தினிற் பொங்குபல்லாரம் சங்கநூல் வெள்ளம், காவியம் ஐந்தும் மார்பினில் நற்கலன். கம்பனுக்கு நூல் கையிற் கங்கணம். கரந்தைத் தமிழ்ச்சங்கத்தின் தொண்டு சேவடி மோதிரம், இவ் வணிகள் தாம் அவர்கள் விழைந்தது ;மகிழ்வுடன் கண்டது.

விண்ணெழிலுடன் கலந்தனர் எங்கள் கவியரசர்; எங்கள் குடும்பத்தலைவர் வழிகாட்டி அன்புகாட்டும் அண்ணல் தமிழ்த்தாயின் தவப்புதல்வர் தனக்குவமை இல்லாதான் தாள் சேர்ந்தனர். சிலம்பின் கிண்கிணிச் செவி அமுது அளித்தவர். காக்கும் கடவுள் கழல் இன்பம் கண்டனர். விசய கார்த்திகை ஞாயிறு அன்று உடல் நீத்து உள்ளம் புகுந்து நெஞ்சு நிறைந்தனர். இறைவனோடாறுமுகன் கலைமகள் முத்தேவரும் இனிய கவி விரும்பி அரசரை அழைத்தேகினர்.

அன்பின் உருவம்—அனைவரும் அறிந்ததே
இன்சொல் இன்சொல்—இதயத்தைக் கேளுங்கள்
தளராத ஊக்கம்—படிதோறும் காணுங்கள்
சலியாத முயற்சி—சகடை வண்டி பாருங்கள்

இடும்பைக்கு இடும்பைப் படுத்தனர். இறுதிவரை ஆறுதல் காணமல் துயர் அடைந்த காலத்தும் தேறுதல் கூறும் தெய்வமே தெம்பு இழந்து நிற்கின்றேன்.

---

தமிழ் வாழ்க! வளர்க!! வெல்க!!!

# யாண்டும்மைக் காண்போம்?

ஆ. வடிவேல்,
பத்தையம்பாளையம், சென்னிமலை (அஞ்சல்),
ஈரோடு (கோட்டம்), கோவை (மாவட்டம்)

தமிழணங்கின் தவமணியே! தகைமை சாலுந்
தமிழ்மணியே! தண்டமிழே! தமிழ்த்தா(ய்) யாழே!
அமிழ்தமெனுந் தமிழ்மொழியை வளர்க்க நாளும்,
ஆர்வமொடு அரும்பணிக ளாற்றி வாழ்ந்த
தமிழரசே தமிழாக்கஞ் செழிக்கச் செய்த
தமிழன்ப! தமிழ்ப்புலவ! தக்க மேலோய்!
தமிழகத்துத் திருவிளக்கே! தனிமை வேண்டித்
தமிழ்மண்ணைப் பிரிந்தீரோ, யாண்டு காண்பேம்?

# இரங்கற்பா.

வே. வேங்கடராஜுலு ரெட்டியார்.

ஓங்குபுகழ்த் தமிழ்மொழியில் அருஞ்செய்யுள் நுண்பொருளின்
உண்மை தேர்தல்
பாங்குவரும் அறிஞர்களும் உவக்குமா நகைச்சுவையிற்
பகர்தல் முன்னூல்
தாங்குபொருள் பிறர்தெரிப்பின் உளமுவந்து வியத்தலின
தன்மை யெல்லாம்
வேங்கடா சலக்கவிஞ இனியெவர்பாற் காண்குதும்யாம்
விளம்பு வாயே

தென்னாட்டுத் திலகமெனத் திருவிளங்குந் தஞ்சைநகர்
சேர்ந்து செம்மை
முன்னாட்டுந் தமிழ்மொழியின் இலக்கணமும் இலக்கியமும்
முதலா மற்றும்
இந்நாட்டில் அறிஞரெலாம் உளம்வியப்பச் சொலுமாற்றல்
ஏய்ந்த மேலோய்
பொன்னாட்டுந் தமிழ்மொழியைக் கற்பிக்க வுளங்கொண்டு
போய வாறே!

ஐயாற்றும் கரந்தையிலும் தமிழ்கற்பான் கல்லூரி
யடைந்தோர்க் கெல்லாம்
மெய்யாய அறிவீந்தாய் அகப்பாட்டின் பொருள்யார்க்கும்
விளங்க வைத்தாய்
நையாதே தமிழ்ப்பொழிலே பலபொருளாற் பலயாண்டு
நன்கு காத்தாய்
ஐயாநீ அருஞ்செய்யுள் உரைநூல்கள் புலவர்விருந்
தளித்தா யன்றே!

எத்துணையோர் நின்னாலே தமிழ்ப்புலவ ராயினர்கள்
எண்ணுங் காலே
எத்துணையோர் நின்னாலே புகழடைந்தார் நின்னுரைகேட்
டின்ப முற்றார்
எத்துணையோ நுண்பொருள்கள் நின்னாலே யாவருக்கும்
எளிய வாய
இத்துணையோ நின்வாழ்நாள்! ஆயினும்நின் புகழ்என்றும்
இலங்கும் மன்னே!

# அன்பின் உருவம்.

அ. சரசுவதி.

தமிழ்நாடு தமிழ்த்தாயின் ஒப்பற்ற தனிப்புதல்வராகிய கவியரசு என்னும் ஒளியை இழந்துவிட்டது. நண்பர்கள் "உடுக்கை இழந்தவன் கைபோல வாங்கே இடுக்கண் களைவதாம் நட்பு" என்ற வள்ளுவர் வாக்கின்படி நடந்த தங்கள் அருந்துணைவரை இழந்து விட்டனர். வையத்து வாழ்வாங்கு வாழ்ந்து மண்ணுலகில் இணையிலாப் புகழெய்தி விளங்கியவர் விண்ணுலகிலும் புகழெய்தச் சென்றபோது எங்கள் உள்ளம் கலங்கித் துயர் கரை கடந்தது. நாங்கள் அன்பின் உருவமான ஒரு ஒளியை இழந்து விட்டோம். அவர் அழைக்கும்போதும் உரையாடுகையிலும் வார்த்தைகளில் அன்பு நடமிடும், அறிவுரை கூறும்போதும் தனது அனுபவங்களை எடுத்துச் சொல்லும் போதும் நகைச்சுவை ததும்பப் பேசும்போதும் அதைக்கேட்டு அகமகிழ்வோம். பிறர் துன்பத்தைக் கண்டு மனந்தாளாது அத் துன்பம் தமக்குற்றதுபோல் அதை உடனே நீக்க முயலும் தனக்கென வாழாப் பிறர்க்குரியாளராகிய அவர், தமக்கு எத்தகைய உடல் துன்பமும் மனத்துன்பமும் நேர்ந்தபோதும் அஞ்சி மனம் சோர்ந்ததில்லை. கலை நலங்கண்ட குணப்பெருங்குன்றாகிய அவர், தம் அறிவொளிகொண்டு நாட்டின் அகவிருளைப்போக்குவதைக்கண்டு கூற்றுவனும் ஆசைகொண்டு அவரை அழைத்துச் சென்றனன்போலும்! இன்னும் நெடுநாட்கள் அவரைக்காணும்பேறும் பேசும் பேற்றையும் அடைந்தோமில்லையே என்பதை எண்ணுந்தோறும் மனம் புண்படுகின்றது. இது காலத்தினால்தான் மாறவேண்டும்.

ஆருயிர் அன்பர், அரங்க-வேங்கடாசலம் பிள்ளை யவர்கள்
பரு உடல் மறைந்தமை குறித்த

# இரங்கற்பா.

அ. பொன்னண்ணு, செங்கரையூர்.

திருவரங்க நாதன் பாதம் திகழ்தரும் உளத்தன் ஆகும்
திருவரங்க சாமிப்பிள்ளை செய்தநற் றவப்பே றென்னத்
திருவரங்க வேங்கடா சலமும் திருவளர் ஆதி மூலமும்
இருவருமங் குதித்த பின்னர் இளையமா ணிக்கம் வந்தார்

தந்தையார் இறைதாள் எய்தத் தாயாரின் உதவி கொண்டு
மைந்தருள் முதல்வன் ஆகும் மதிநலம் வாய்த்த அண்ணல்,
தந்தையின் பின்னோர்க் காற்றல் தானொரு அறிஞன் ஆதல்
சிந்தையிற் கவலை தூண்டச் சிறந்ததோர் வழியை ஆய்ந்து

தஞ்சையில் உறையுள் வைத்துத் தன்னுடன் பிறந்தா ரோடும்
விஞ்சைசில் ஆண்டு கற்று விரிந்தபல் செலவால் மாழ்கித்
தஞ்சையில் நின்றும் மீண்டு தாமுறு மோகன் ஊரில்
எஞ்சிலில் வாழ்க்கை செய்ய இயைந்தனை எனினுந் தஞ்சை

பள்ளியிற் பயின்ற ஞான்று பழகிய நண்பர் சில்லோர்
உள்ளமும் உணர்வும் ஒன்றும் உவகையில் உரைத்த மாற்றம்
தள்ளருஞ் சிறந்த செய்கை தண்டமிழ் கற்கும் ஆவல்
உள்ளுளே பிணைந்து நிற்க ஊக்கமே துணையென் றெண்ணி

கணக்கராந் தொழிலும் எற்றுக் கசடறத் தமிழுங் கற்றுப்
பிணக்கினை அறுக்கும் நுண்ணூற் பெருமைசேர் புலவன் ஆகி
வணக்கமார் இருவர் பின்னோர் வழிவரு கணக்கர் ஆக்கி
மணக்குமில் லறத்தின் வாழ்வை மருவின இளைஞ ரோடும்

கரந்தையிஞ் சங்கந் தோன்றிக் கருதருந் தமிழ்த் தொண்டாற்றிப்
பரந்தவில் வுலகம் போற்றும் பான்மையின் ஒலியால் ஓங்கி
விரிந்துநில் நிலக தெல்லாம் விளம்பினுர் வேங்கடா சலநீ
நிரந்தரம் அமைச்சாய்செய்த நிலவுமெய்ப் பணியின் மாண்பே !

கவியர சிருந்து கற்றுக் கலைமலி புலவ ஞகிக்
கவியர செனச் சான்ருேர் கருதுபல் பாக்கள் பார்த்துக்
கவியர சென்னும் பட்டம் கரந்தையஞ் சங்கம் நல்கக்
கவியர சென்ன ஞாலம் கனிவுடன் அழைக்கப் பெற்ருய்

நண்பரின் வருகை காணின் நகைமுகிழ் முகமன் கூறிப்
பண்பமை பகுதி காட்டிப் பருவுடல் குலுங்க நக்கே
உண்பதம் உசாவி மேலும் உனங்குளிர் வவையுஞ் செய்வாய்
என்பத இவைக ளெல்லாம் இனியுறல் எங்கே ஐயா !

பதவிகள் பலவும் ஏற்றுப் பரிவுடன் கடமை ஆற்றிப்
புதுவன புனைதல் செய்தே புலமையின் புகலங் திறமை காட்டி
விதிமுறை இளைஞர் மைந்தர் விழிம்புகல் மனைவி சுற்றம்
விதிதறில் உயர்வை யெய்தும் வழிகளும் இயைந்த செய்தாய்

இன்னமும் வருந்தி வந்தார்க் கியைந்தனை றுதவு பண்பால்
பன்னரும் புகழை யெய்திப் பாவுலீட் டின்பர் துய்க்க
உள்ளியோ ? நந்தம் நண்பர் உமையொரு பாகன் கண்ணன்
துன்னியங் குள்ள பல்லோரர் தொடர்பின விழைந்தோ ? சென்ருய் !

---

இராமச்சப்திரன் மனிகை, கரந்தை.

வற்ரு உரைவளமும் வண்டமிழ்சேர் நல்லுணர்வும்
கற்ருர் விரும்ம் கருத்தழகும்—உற்ருரைப்
போற்றும் பெருங்குணமும் பெற்ற கவியரசே !
ஆற்ருேம் உனையிழந்தோ மால்.

எம்மைப் பிரிந்துசென்ருய் எந்தமிழர் வாட்டமுற
உம்மைப் பிரித்த ஒருசெயலால்—உம்மை
தேவர் தமிழழிந்து தேர்வர் பெரும்புலவர்
யாவருனை ஒப்பார் இனி.

# இரங்கற்பாக்கள்.

புலவர், முருகவேள் B. O. L.
முத்தியாலுப்பேட்டை உயர்பள்ளி, சென்னை.

மிகச்சிறந்த பெரும்புலவ! வேங்கடா சலப்பெரியோய்!
மேன்மை மிக்கோய்!
தகச்சிறந்த பண்பெல்லாம் தாம்திரண்டே ஓருருவாம்
தகைமை சான்றோய்!
நகைச்சுவைகள் பொருட்செறிவும் நற்குறிப்பும் பொதுளமிக
நலக்கப் பேசி
உகப்பித்தே யாவரையும் உளங்கவரும் உயர்நலத்தோய்!
ஒளிந்தாய் எங்கே?
புலமைநலம் மிகச்சிறந்தோய்! பொருவிறந்தோய்! தன்னடக்கம்
பொறுமை மிக்கோய்!
இளமையினிற் பலதுன்பம் எய்திநின்றும் கற்பஎலாம்
இனிதே கற்று
வளமைமிகு நல்லாசான் வழிப்படையும், கலம்பகமும்
மற்றும் யாத்துத்
தலைமைநலம் தகக்கரந்தைக் கவியரசர் எனும்பட்டம்
கவினப் பெற்றாய்!
தொல்காப் பியமுதலாம் தொன்னூல்கள் உளவெல்லாம்
சூழ்ந்து தேர்ந்து
பல்காலும் மாணவர்கள் பற்பலர்தாம் பயன்பெறுமா
பயிற்று விக்க
ஒல்காத பேரருளின் உளமுடையோய்! நினைஒப்பக்
கற்று வல்லோர்
நல்காத லொடுபிறர்க்கும் நாளுமிகக் கற்பித்த
நல்லார் யாரே?
மாணவர்கள் நிலையறிந்து மற்றவர்தம் மனங்கொள்ளும்
வகையின் எல்லா

நானுட்பம் செய்திகளும் நவல்குறிப்பும் பிறவுமெலாம்
நுணுகிச் சூழ்ந்து
பேணிமிகத் தெளிவாகப் பெரிதுமிக எளிதாகப்
பெட்பின் நின்போல்
யாணர்நலன் எழிலினிமை இசைவித்துக் கல்விசொல
வல்லார் இல்லை
எத்தகைய கடினமிகும் எனைநூலும் நின்முனர்யாம்
இருந்து கேட்பின்
சற்றெனினும் மலைவெய்தேம் தடுமாறேம் அங்கைநெல்லித்
தகவின் ஓர்ந்து
மற்றிதென்னை ? பொழுதுசென்ற மாட்சியென மிகவியந்து
மகிழச் செய்த
வித்தகன்நீ ! நின்பால்யாம் விச்சைகற்கச் செய்ததவம்
மேலை என்னே ?

---

## 2

ஓங்கிய சிறப்பின் உயர்ந்த கேள்வி
வேங்கடா சலப்பெயர் மேவுநற் பெரும !
செறுத்த செய்யுட் செய்செந் நாவின்
திறத்தின் மிக்குப் பொறித்தநற் புகழால்
கரந்தைக் கவியரசாம் சிறந்தநற் பட்டம்
பொருந்தப் பெற்றோய் ! பெருந்தமிழ்ப் புலவ !
ஆசான் ஆற் றுப்படை முதலாப் பேசுபல
நூலும் அளித்த பேரா சிரிய !
வடமலைப் பிள்ளை மாவன் கதைமுத்து
மிகமிகச் சிறந்து நகைமிக விளக்கும்
சுவைநலஞ் சான்றபல் கவிதைகட் டுரைகள்
பற்பல வரைந்த நற்பெருங் குரிசில் !
சேனை வரையமுதற் சிறந்தபன் னூல்களும்
மாணவர் யாமெலாம் பேணிமிகக் கற்ப
ஐயந் திரிபுகள் அகற்றிமிக நன்றே

எழுத்தெழுத் தாக எடுத்தினிது விளக்கி
விழுத்தகு முறையிற் பயிற்றும்எம் குரவ!
மூப்புறு நிலையினும் யாக்கைத் தளர்வெலாம்
நோக்கலை சிறிதும் எம்பொருட் டூக்கமொடும்
அருள்மேற் கொளீஇப்பல் பொருளியல் நூற்கள்
நாடொறும் அகத்தே நாடினை போந்து
பாடம் சொற்றநின் பண்பெவன் பகர்கேம்?
சேனு வரையரும் சிவஞான முனிவரும்
பரிமே லழகரும் உரையா சிரியரும்
நச்சினர்க் கினியரும் நற்பே ராசிரியரும்
என்றிவர் காலத் திருந்தில மாகலின்
நன்றவர் பக்கல் நலத்தகப் பயிலும்
பேறற் றிலம்எனப் பேதுறுதும் எனினும்,
அகநா னூற்றின் தகுமுறை யாள!நின்
திருமுனர் இருந்து சிறிதெனும் கற்கும்
பெறரும் சிறப்பே பெற்றதுட் கொளீஇ
ஏனைக் கல்லூரி மாணவர் தம்மினும்
சிறந்தனம் யாம்என இறும்பூ தெய்துபு
மிகப்பெரி துவந்தோம்! தகவுயர் சான்றோய்!
இனையபன் மாட்சியைநீ யாமெலாம் வருந்த
நனிஎமைப் பிரிந்தே, இனிநினைக் காணவும்
கண்டு வணங்கவும், கனிவுயர் நின்மொழி
அமிழ்தெனச் செவியின் மாந்தி மகிழவும்,
இயலா வகையில் இவ்வுலகை நீத்து
மறைய லுற்றனை! அறைவதென் யாமே?
இயற்கையை வெல்லுதல் எவர்க்கும் அரிதென
மயற்கை விடுத்து மற்றுநின் ஆருயிர்
இறையருட் டாள்நிழல் இன்புற வைக
மனமொழி மெய்களின் வணங்குதும் பணிந்தே!

முருகவேள்,

திருவள்ளுவர் செந்தமிழ்ச் சிவநெறிக் கழகம்,

சைதாப்பேட்டை சென்னை.

கரந்தைக் கவியரசு. R. வேங்கடாசலம் பிள்ளை அவர்கள்
மறைந்தமை குறித்துத் திருப்பதி S. V. O. கல்லூரித்
துணைத் தமிழ்ப் பேராசிரியர். வித்துவான்.
செ. வேங்கடராமச் செட்டியார் பாடிய,

# இரங்கல் ஏழு.

கரந்தைக் கவியரசே! கல்விக் கிருப்பே!
நிரந்தினிது சொல்லும் நெறியோய்—பரந்த
தமிழுணர்ச்சி வீறுபெறத் தண்சுவையே யூட்டும்
தமிழ்ப்புலவோய்! சென்றாயோ தான்.

ஆர்வேங்க டாசலமென் றுருமறி பேருடையோய்!
நார்தமிழ வேட்குற்ற நண்பினேய்!—பாரிற்
பிரிந்தவர் நண்பர் பிரிவினையாற் றுது
பிரிந்தவர்பால் சேர்ந்தனையோ? பேசு.

நாட்டாரை யாவவர்கள் நட்டார்நின் பண்புணர்ந்து
நாட்டார் மகிழவக நானூறு—பாட்டிற்
குறைவரையுங் காலத்து னைத் துணையாக் கொண்டார்
விரையவரச் செய்தாரோ விண்?

பிணியினைப் பாராட்டும் பெற்றியார் யாரே?
பிணியினல் நீவருந்திப் பேதுற்ற போதும்
பிணியால் வருநலங்கள் பேசிப்பா ராட்டிப்
பிணிப்பத்தும் பாடினையே பேர்த்து.

உள்ளுறைகள் மிக்க உயர்ந்தவகப் பாட்டிற்குத்
தெள்ளுமுரை தீட்டியநின் செங்கையும்—உள்ளம்
உவக்க உவக்க உரைநயஞ்சொல் வாயும்
சுவைக்கமண் சேர்ந்தனவோ சோர்ந்து?

நின்புலமை தன்னல் நிறைபுகழைப் பெற்றிருந்த
தென்கரந்தைக் கல்லூரி சேர்புலவர்—தொன்னலஞ்சேர்
மாணவர்கள் துன்பமுற வண்டமிழ்த்தாய் சேயேநீ
சேணுலக முற்றாயோ தேர்ந்து.

வாணுள் முழுமையும் வண்டமிழ்க்கே தொண்டுசெய்து
மாணுக்கர் பல்லோரை வாழ்வித்தாய்—பேணுரும்
பேணிப் பயில்தமிழ்நூல் பேசும் பெரும்பொருளைப்
பேணியடைந் தின்புறுக பேர்ந்து.

# என்று காண்பேன்.

வே. செகதம்பாள்.

[இங் குறிப்புக்களை எழுதியவர்கள் காலஞ்சென்ற கரந்தைக் கவியரசு R. வேங்கடாசலம் பிள்ளை அவர்களின் வாழ்க்கைத் துணைவி யாவர். பொ. தொ.]

காலஞ்சென்ற என் கணவர் கவியரசர் இல்லத்தின் தூண்டா விளக்காகத் திகழ்ந்தவர். நாட்டில் மட்டுமின்றி வீட்டிலும் இனிமையாகவும் நகைச்சுவை தோன்றவும் பேசுவார். எனது வாழ்க்கையை தேன்பாயும் இன்பப் பூஞ்சோலையாகச் செய்தவர். ஆடம்பரத்தில் சிறிதும் விருப்பமற்றவர். பால் போன்று தூய மனதுடையவர். கண்ணுக்கினியார் உயர்ந்த பண்புகளுடையவர். தாம் கற்ற கல்வியையும் ஈட்டிய பொருள்களையும், தேங்காது பாய்ந்து ஏரிகள், குளங்கள், கால்வாய்கள் எங்கும் நிரப்பி வான்பார்த்து ஏங்கி காய்ந்து கருகி விடும் நிலையிலுள்ள பயிர்களுக்கும் உயிரூட்டி செழிக்கவைத்து வையத்தை வாழ்விக்கும் பொன்னிநதிபோன்று வழங்கி எல்லோர்க்கும் பயன்படுமாறு செய்தார். அவர் வாயிலிருந்து வரும் மொழிகளில் இல்லையென்ற சொல்லே இல்லை எனலாம். ஏழை மக்கள் வந்து வாய் திறந்து கேட்கும் முன்னரே அவர்களின் முகக்குறிகண்டு உணவிடச் செய்வார். திருவையாற்று அரசினர் கல்லூரியில் சிலகாலம் பணியாற்றியபொழுது எளிய குடும்பத்தில் பிறந்து தமிழை விரும்பி கற்று மேலும் படிக்க அவாவி ஆனால் வசதியில்லாது திண்டாடும் மாணவரகள் அவரைக் கண்டு உதவிபெற வருவார்கள். அவர்களுக்கு காட்க்கு எளியராய் அவர்களின் குறையைக் கேட்டு அவர்களிடம் இன் முகத்துடன் பேசி அவர்களைத் தலைவரிடம் அழைத்துச்சென்று அவர்களுக்கு இலவசமாக உணவும் உறையுளும் தரச்செய்வார். வேலையில்லாமல் திண்டாடும் இளைஞர்களுக்கும் தக்கோரிடம் சென்று அவர்கட்கு ஆதரவாகப் பேசி அவர்களை அரசாங்கப் பணியிலோ மற்றும் தொழில்களிலோ அமர்த்துவார். அப்படிப்

பட்ட தாம் ஓய்வுபெற்று வீட்டிலிருந்தால் ஏழை மக்களை ஆதரிக்க முடியாதே என்றுதான் வானவர் நாட்டினுக்கு பொருளீட்டச் சென்றனர் போலும். அவருடைய புலமையும் உயர்ந்த பண்புகளையும் கண்டவுடன் வானவர் அவரைப்போற்றித் தம்மிடமே வைத்துக்கொண்டனரா? இள ஞாயிறு ஒத்த அவர் இங்கு விட்டேகி அங்கு ஒளி வீசிக்கொண்டிருக்கிறார் போலும். இருபத்தெட்டு வருடங்களாக அவரால் வளம்பெற்று ஒளிவீசிய எனது வாழ்க்கை அவர் மறைந்தவுடன் கதிரவனை இழந்த பகல் போலும் நிலவை இழந்த இரவு போலும் மாறிவிட்டது. அவருடைய இன் முகத்தையும், தேன் போன்ற மொழியையும், அன்புகொண்ட மனத்தையும் என்னால் மறக்க இயலாது. இனி அவரை என்று எவ்வுலகில் காண்பேனோ? அறியேன்.

வாழ்க கவியரசர் புகழ்.

---

## கரந்தைக் கவியரசு.

நா. இராசகோபாலன் IV. U. C.

ஆர்வேங்க டாசலம் என்றால் புலவருள்
யார் தெரி யாதார்? உளர்கொல்லோ? —சீர்மேவும்
தெய்வச் சிலையார் உரைதந்தோன் நம்கரந்தை
உய்ய வழிகாட்டித் தான்!

ஆசான் அருந்தமிழ்ப் பாவலன் கட்டுரைவல்
ஏசாச் சிறப்பின் எழுத்தாளன்—மூசாநில்
இன்பக் கதைவல்லோன் இன்சொல் அருளுவோன்
அன்பில் திளைத்தார் பலர்!